பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 தை 23 புதன்கிழமை (06.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 72

# தாக்குதல் படகுடன் 7 படையினரை மன்னார்க் கடலில் காணவில்லை!

## தமிழக மீனவருக்கு உதவச் சென்றபோது அங்கிருந்து தாக்குதல் நடத்தப்பட்டதாம்

கொழும்பு,பெப்ரவரி6

தலைமன்னார், இரணைதீவுக் கடற்பரப்பில் திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில், இனந்தெரியாத தரப்பு ஒன்று நடத்திய தாக்குதலில், கடற்படையின் அதிவேகத் தாக்குதல் படகுடன் ஏழு கடற்படையினர் காணாமற்போயினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழக மீனவர்களின் இரண்டு படகுகள் பழுதடைந்ததாகக் கருதி இலங்கைக் கடற்படையினர் உதவிக்குச் சென்ற வேளை, அந்தப் பக்கத்திலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அப்போதே மேற்படி விபரீதம் நடைபெற்றது என்றும் இணையத் தளத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக படை அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டார் எனத் தெரிவித்து இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டன. அவற்றில் கூறப்பட்டவை வருமாறு:-

தலைமன்னார் இரணைதீவுக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்குச் சொந்தமான சுமார் 450 ட்றோலர் படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தன. இந்த மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் அப்பகுதிக்கு அதிவேகப் படகுகள் இரண்டில் கடற்படையினர் விரைந்தனர்.

அச்சந்தர்ப்பத்தில் இந்திய மீன்பிடி ட்றோலர்கள் அங்கிருந்து அகலவே, இரண்டு மீன்பிடிப் படகுகள் மட்டும் அந்த இடத்திலேயே நின்றன. அவை பழுதடைந்து நிற்கின்றன எனக் கருதி கடற்படையினர் அவற்றுக்கு அருகே செல்ல முற்படுகையில் அப்படகுகளில் இருந்து கடற்படைப் படகுகளை நோக்கித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனை அடுத்துக் கடற்படையினரும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட் பொருத்தப்பட்ட 'றொக்கெற் லோஞ்ச'ரால் தாக்குதல் நடத்தப்பட்டதாக அரசுத் தரப்பில் தகவல்

கொழும்பு,பெப்.06

இந்திய மீன்பிடிப் படகு ஒன்றிலிருந்து கிரனேட் பொருத்தப்பட்ட றொக்கெற் லோஞ்சர் மூலம் இலங்கைக் கடற்படைப் படகு மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும், அதில் இலங்கைக் கடற்படையின் ஒரு படகு சேதமடைந்திருப்பதாகவும் இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் கொமடோர் டி.ஜே.பி. தஸநாயக்கா கூறியிருக்கின்றார்.

தஸநாயக்கா தெரிவித்த தகவல்கள் குறித்து இந்திய ஊடகம் ஒன்று வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் சுமார் நானூறு இந்திய மீன்பிடிப் படகுகள் தலைமன்னார்ப் பகுதியில் இலங்கையின் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் புகுந்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்தன.

எமது கடற்படை ரோந்துப் படகுகள் அவற்றை அண்மித்த சமயம் அந்தப் படகுகளில் இரண்டிலிருந்து உதவிக்கான சமிக்ஞை எழுப்பப்பட்டது.

அதையடுத்து எமது ரோந்துப் படகுகள் அவற்றை நெருங்கிய சமயம் அவற்றில் ஒன்றிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## புதிய எம்.பிக்கள் இருவர் பதவியேற்பு

கொழும்பு,பெப்.6

புதிய எம்.பிக்கள் இருவர் நேற்றுக் காலை நாடாளுமன்றத்தில் சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டாரவின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் பதவி இழந்த ஈழவேந்தனின் இடத்திற்கு நியமிக்கப்பட்ட முஹம்மட் இமாமும், கிளைமோர்க் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த அமைச்சர் த.மு. தஸநாயக்கவின் வெற்றிடத்திற்குத் தெரிவான பிரியங்கர ஜயரட்ணவுமே நேற்றுப் புதிய எம்.பிக்களாகச் சத்தியப்பிரமாணம் செய்தனர். (10ஆம் பக்கம் பார்க்க)

## கூடாநாட்டைச் சேர்ந்த 7 பேரை தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி

கொழும்பு, பெப். 06

கொழும்பு நகரில் குண்டுகளை வெடிக்க வைத்து வன்முறைகளைத் தூண்டிவிட ஏற்பாடுகள் செய்தார்கள் என்று கூறி சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 7 பேரை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

கொழும்பு புறக்கோட்டைப் பொலிஸார் நீதிமன்றில் மனு ஒன்றை தாக்கல் செய்தபோதே கொழும்பு பிரதான நீதிவான் நிஸாந்த

(10ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறு, பதவியாவிலும் பாடசாலைகள் மூடப்படும்

வவுனியா,பெப்.6

அநுராதபுரம், மணலாறு மற்றும் பதவியா ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் எதிர்வரும் திங்கட்கிழமை வரை மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு காரணங்களைக் கருத்திற்கொண்டே இத்தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக அரசாங்கத் தரப்புத் தகவல் தெரிவித்தது.

கொழும்பு மாநகர சபைப் பகுதியில் உள்ள பாடசாலைகள் ஒரு வார காலத்துக்கு மூடப்பட்டிருப்பது தெரிந்ததே. (அ-2)

## புதுக்குடியிருப்பு, கிளிநொச்சியில் மாறி மாறி நேற்று மூன்று தடவைகள் விமானத் தாக்குதல்!

### ஐ.நா. அலுவலகங்களுக்கு அருகிலும் வீழ்ந்தன!!

கொழும்பு,பெப்.6

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கைவேலிப் பகுதியில் விமானப் படையினரின் 'மிக்' ரக விமானங்கள் நேற்று இரண்டு தடவைகள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

வீசப்பட்ட குண்டுகள், அங்குள்ள ஐ.நாவின் சில அலுவலகங்களுக்கு அருகில் வீழ்ந்து வெடித்தன என்று ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். எவ்வாறாயினும் ஐ.நா. அமைப்பின் உயிர், உடைமைகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

இத்தாக்குதல் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் தொடர்பு மையத்தை இலக்கு வைத்து நடத்தப்பட்டது என்றும், குண்டுகள் குறிதப்பாமல் வீசப்பட்டன என்றும் படைத்தரப்பினர் அறிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு, கைவேலிப் பகுதியில் ஸ்ரீலங்கா வான்படையினரின் வானூர்திகள் நேற்று இரண்டு தடவைகள் குண்டுகளை வீசித்தாக்கின. இத்தாக்குதல்களில் 3 பொதுமக்கள் காயமடைந்ததுடன் 5 வீடுகள் ஓரளவுக்கு சேதமடைந்துள்ளன என்று வன்னிச் செய்திகள் தெரிவித்தன.

முதலாவது தாக்குதல் முற்பகல் 10.10 மணிக்கும் இரண்டாவது தாக்குதல் பிற்பகல்

(10ஆம் பக்கம் பார்க்க)

## 200அடிப் பள்ளத்தில் பாய்ந்தது பஸ்! மூவர் பலி; ஐம்பது பேர் படுகாயம்!!

### புசல்லாவை அருகில் கோரம்

கம்பளை,பெப்.6

புசல்லாவைக்கு அண்மையில் மேல் மலைப் பகுதியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பயணிகளுடன் சென்ற தனியார் பஸ் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி, இருநூறு அடிப் பள்ளத்தில் பாய்ந்ததில் பாடசாலை மாணவி ஒருவர் உட்பட மூவர் உயிரிழந்தனர். ஐம்பதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

பெரட்டாசித் தோட்டப் பகுதியிலிருந்து புசல்லாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸே நேற்றுக்காலை 6.45 மணியளவில் இவ்வாறு வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்தது.

புசல்லாவையில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் பயிலும் ஏ.லக்மாலி (வயது - 12) என்ற மாணவியும் நிமல் குணவர்த்தன (வயது - 29) என்பவரும் லவுகபிடிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையிலும், காளிமுத்து (வயது - 65) என்பவர் கம்பளை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையிலும் உயிரிழந்தனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## நவ்றூ தடுப்பு முகாமில் முடங்கிக் கிடந்த 82 இலங்கையருக்கு ஆஸி.நிரந்தர விஸா

கொழும்பு,பெப்.6

ஆஸ்திரேலியாவுக்குள் அரசியல் தஞ்சம் கோரி புகமுயற்சிக்கையில் கைது செய்யப்பட்டு, ஆஸிக்கு வெளியே நவ்று தீவில் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 82 ஈழத் தமிழர்களில் எஞ்சியிருந்த 21 பேருக்கும் ஆஸி அரசு நிரந்தரப் பாதுகாப்பு விஸா வழங்கியிருக்கின்றது.

ஆஸ்திரேலிய குடிவரவுத் துறை அதிகாரியொருவர் இதனை உறுதி செய்துள்ளதுடன், அவர்கள் பிரிஸ்பேர்ன் நகருக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அதிகாரிகள் நவ்று தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த 61 இலங்கையர்களுக்கு ஏற்கனவே அரசியல் தஞ்சம் வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எஞ்சியிருந்த 21 இலங்கையர்களும் ஆஸ்திரேலியாவிற்குள் அழைத்துச் செல்லப்பட்டவுடன் நவ்று தடுப்பு முகாம் மூடப்பட்டுவிடும் என்று கூறப்படுகின்றது.

அந்த நாட்டின் புதிய அரசு இந்தத் தடுப்பு முகாமை மூடுவது குறித்த உறுதி மொழியை ஆஸிக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (10ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாட்ஸ்- ரெக் கேபிள் T.V.சோப் 8 ஆம் ஆண்டில்......



* டிஷ் டீ.வி மற்றும் கேபிள் டீ.வி உபகரணங்கள் நியாயமான விலையில் கிடைக்கும்.
* டிஷ் டீ.விக்குரிய கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
* வியாபாரிகளுக்கும் மொத்த கொள்வனவுகளுக்கும் விசேட விலைக் கழிவு உண்டு.

டிஷ் டீ.வி. பக்கேஜ்கள் ரூபா 11000/=இல் இருந்து

விவரங்களுக்கு:

**சாட்ஸ் ரெக்**

இல.182, கே.கே.எஸ்.வீதி,
(குளப்பிட்டி சேச் அருகில்) கொக்குவில்.
T.P.: 021 2225908

(70849)


# கப்பல் சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ்.மாவட்டத்தில் இருந்து பிற மாவட்டங்களுக்குப் பிரயாணம் மேற்கொள்வதற்கான பயணிகள் கப்பல் சேவை இன்று புதன்கிழமை நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை வியாழக்கிழமை வழமைபோல் சேவை இடம்பெறும் என்றும் யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

அத்துடன் இன்று புதன்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் பிரயாணத்தினை மேற்கொள்ளவென யாழ்.செயலகத்தில் அனுமதிச் சிட்டைகளைப் பெற்றவர்கள் அனைவரும் நாளை வியாழக்கிழமை நடைபெறும் கப்பல் சேவையில் பயணம் செய்ய முடியும் என்றும் அரச அதிபர் அறிவித்துள்ளார். (203)

## விபத்தில் பெண் காயம்

யாழ்ப்பாணம்,பெப்.6

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியைக் கடக்க முயன்ற குடும்பப் பெண்ணை மோதிக் காயப்படுத்தியது.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த விஜ ரூபன் விஜயவாணி (வயது - 29) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

வீதியில் சென்ற வாகனத்தில் பிள்ளைகளுக்கு ஐஸ்கிறீம் வாங்கிக் கொண்டு வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## மின்சாரம் தாக்கி மின்சார சபை ஊழியர் மரணம்

யாழ்ப்பாணம், பெப்.6

மின்சாரம் தாக்கி மின்சார சபை ஊழியர் ஒருவர் பலியானார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு மட்டுவில் கிழக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த நாகமணி விசாகலிங்கம் (வயது 50) என்னும் மின்சாரசபை முகாரியே மரணமானவராவார்.

தனது மகளின் பூப்புனித நீராட்டு விழாவுக்காக அமைக்கப்பட்ட பந்தலுக்கு மின் இணைப்பு வேலைகள் மேற்கொண்டிருந்ததாகவும், அந்தவேளையில் தடைப்பட்டிருந்த மின்சாரம் திடீரெனவந்ததால் தூக்கி வீசப்பட்டு மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## தவறிவிட்டது

தில்லைநாதன் முகுந்தன் ஆகிய எனது தேசிய அடையாளஅட்டை (இல. 803610240V) யா/மத்திய கல்லூரிக்கும் பரமேஸ்வராச் சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யா/மத்திய கல்லூரியில் ஒப்படைத்து உதவவும்.

தொ.பே 021 222 3658

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 26 . 08 . 1946

இறைவன் அடியில் 18 . 01 . 2007



### திருமதி கனகேஸ்வரி சிங்கராசன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

திதி: அமாவாசை

அன்பின் திருவுருவமே பாசத்தின் உறைவிடமே!
எமைப் பிரிந்து நீங்கள் சென்று ஓராண்டு
காற்றாகிக் கழிந்து விட்டது ஆனாலும் அம்மா
உங்கள் நினைவுகள் எம் இதயக் கோவில்களில்
அன்பெனும் உருவமாய் அகலாது இருக்கிறது
எங்கள் நெஞ்சில் - அம்மா!

உங்கள்பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

(70847)

ஓம் விராட் விஸ்வ பிரமனே நமஹ

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

பிறப்பு 11 ★ 09 ★ 1924

இறப்பு 17 ★ 01 ★ 2008



கடந்த 17.01.2008 அன்று சிவபதமடைந்த எங்கள் தாய்

### திருமதி சண்முகம் சீதாலட்சுமி

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (06.02.2008) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**பிள்ளைகள்.**

45/4,பூநாறி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

(70851)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 21 ★ 06 ★ 1930

உதிர்வு 17 ★ 01 ★ 2007



### திருமதி மனோன்மணி சுப்பிரமணியம்

திதி: தைமாத அபரபட்ச சதுர்த்தசி

காலத்தின் சுழற்சியில் நினைவுகள் என்றும் கரைவதில்லை
அன்புடன் பண்பை ஊட்டி மருந்தாக்கி நோய் போக்கிய உறவு;
எம்மை உருவாக்கிய தெய்வம் உங்கள் உறவுகள் பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,எனக் கிளை விட்டு பெரு
விருட்சமாக வளர்ந்து நிற்கின்றது இந்த நிழலில் மாத்திரமே நாம்
தங்க முடியும் நிஜத்தைக் காணமுடியாது. ஆண்டொன்றினைக்
கடந்த பின்பும் உங்கள் பாசப்பிணைப்பின் ஈரங்கள் கண்ணின்
கடை விழியில் தேங்கி நெஞ்சைக் கனக்கச் செய்கின்றது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய அன்புடன் இறைவனை நோக்கி கை ஏந்துகின்றோம்.

அரசடி வீதி,
தாவடி வடக்கு.

(70843)

**பிள்ளைகள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## யாழ்ப்பாணம்-நல்லூர் திருவருள்மிகு நாச்சியம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்



07.02.2008 வியாழக்கிழமை மு.ப. 10.30மணிக்கு - கிரியாரம்பம்
08.02.2008 வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு - தூபிஸ்தாபனம்
பி.ப. 3.30மணிக்கு - பிரபஸ்தாபனம்
09.02.2008 சனிக்கிழமை காலை 6மணி முதல் மாலை 6மணிவரை

### பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல்

11.02.2008 திங்கட்கிழமை காலை6மணிக்கு மஹாபூர்ணாகுதி,9.36 மணிக்கு தூபிகள் அபிஷேகம் தொடர்ந்து மஹாகும்பாபிஷேகம் நண்பகல் 12.00மணிக்கு மஹேஸ்வரபூஜை (அன்னதானம்) நடைபெறும்.

கச்சேரி -நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

**ஆலய பரிபாலன சபை.**

(சி/551360)

## கலை ஒளி மன்றம் நடத்தும் மாவட்ட மட்ட ஓவியப் போட்டி - 2008

**பரீட்சைத் திகதி:10.02.2008**

**ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணி**

### பரீட்சை நிலையங்கள்

1) யாழ்ப்பாணம் வலய மாணவர்கள்: யா/மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
2) தீவகம் வலய மாணவர்கள்: யா/மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
3) வலிகாமம் வலய மாணவர்கள்: யா/இணுவில் மத்திய கல்லூரி.
4) வடமராட்சி,தென்மராட்சி மாணவர்கள்: யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.
5) பிரிவு 5 இற்கான தனிப்பட்ட பரீட்சார்த்திகள், தங்கள் கல்வி வலயத்திற்குட்பட்ட பரீட்சை நிலையத்தில் தோற்ற வேண்டும்.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பெற்றுள்ளன.

*குறிப்பு:* அனுமதி அட்டை கிடைக்காத பரீட்சார்த்திகள் குறிப்பிட்ட வலயத்திற்குரிய பரீட்சை நிலையங்களுக்கு உரிய நேரத்திற்குச் சமுகந்தரவும்.


கலை ஒளி மன்றம்,
இணுவில்.

**தலைவர்.**

(70854)

## மரண அறிவித்தல்

### சுந்தரம்பிள்ளை தர்மராசா



பலாங்கொடையைப் பிறப்பிடமாகவும் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை தர்மராசா நேற்று (05.02.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சறோசினிதேவியின் அன்புக் கணவரும் குசலகுமார் (ஜேர்மனி), சிவலக்சுமி (கனடா), சிவகுமார் (லண்டன்), சுந்தரகுமார் (ரயர்க்கடை உரிமையாளர், ஆனைக்கோட்டை), பிறேமகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தமிழரசி (ஜேர்மனி), சுந்தரம்பிள்ளை (கனடா), சுயேந்தினி (லண்டன்), சுபாஜினி (ஆசிரியை, யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்), உதயா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2008) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.சுந்தரகுமார் (மகன்-சுந்தர்).

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

(70848)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வேட்டு வைத்தது மழை!

## இலங்கை, இந்தியா அணிகளிடையிலான நேற்றைய போட்டியும் கைவிடப்பட்டது




பிரிஸ்பேன், பெப்.06

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் முத்தரப்புத் தொடருக்கு மீண்டும் ஒரு முறை மழை வேட்டு வைத்தது. இதன்காரணமாக நேற்று நடைபெற்ற இலங்கை, இந்தியா அணிகளுக்கிடையிலானபோட்டி இடைநடுவே கைவிடப்பட்டது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி கௌதம் கம்பீரின் சதத்துடனும், மகேந்திர சிங் டோனியின் அரைச் சதத்துடனும் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 267 ஓட்டங்களைக் குவித்தது. பிற்பாதியில் மழை குழப்ப இலங்கை அணிக்கு துடுப்பெடுத்தாட வாய்ப்புக் கிடைக்கவில்லை. முடிவில் ஆட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்த நடுவர்கள், இரு அணிகளுக்கும் தலா இரு புள்ளிகளை வழங்கினர்.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய வீரேந்திர ஷேவாக் மற்றும் சச்சின் டெண்டுல்கர் ஆகிய இருவரும் தங்களது நிதானமான ஆட்டத்தால் இந்தியாவுக்கு சிறப்பாக தொடக்கத்தை ஏற்படுத்திக்கொடுத்தனர்.

இந்த நிலையில் 35 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மலிங்கவின் பந்துவீச்சில் டெண்டுல்கர் 'போல்ட்' அவுட்டானார். அப்போது இந்தியா 68 ஓட்டங்களை எடுத்திருந்தது. தொடர்ந்து 35 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் அமரசிங்கவின் பந்துவீச்சில் சங்கக்காராவிடம் பிடிகொடுத்து ஷேவாக் ஆட்டமிழந்தார். 21ஆவது ஓவரில் முரளிதரன் பந்துவீச்சில் யுவராஜ் சிங் 2 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து வந்த ரோஹித் சர்மா அதே ஓவரில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினார்.

இதன் பிறகு கம்பீர் மற்றும் அணித்தலைவர் டோனி ஜோடி சேர்ந்து இந்தியாவை சரிவிலிருந்து மீட்டனர். இருவரும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். கம்பீர் அபாரமாக ஆடி சதம் அடித்தார். டோனி 88 ஓட்டங்களைக் குவித்தார். 50 ஓவர்கள் முடிவில் இந்தியா 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 267 ஓட்டங்கள் எடுத்தது. இதனையடுத்து, இலங்கைக்கு 268 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. எனினும், மழை காரணமாக இலங்கை அணியால் ஓர் ஓவர் கூடத் துடுப்பெடுத்தாட முடியவில்லை. இதன்காரணமாக இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகள் வழங்கப்பட்டன.

இத்தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆஸ்திரேலியா, இந்தியா அணிகள் மோதிய போட்டி, மழையால் கைவிடப்பட்டதைத் தொடர்ந்து இரு அணிகளுக்கும் தலா இரண்டு புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

# எகிறும் ஆடுகளங்களை இந்தியாவில் அமைக்குக

## வெங்சர்க்கார் கோரிக்கை

புதுடில்லி, பெப்.06

பந்து எழும்பி வரக்கூடிய வகையிலான எகிறும் ஆடுகளங்களை இந்தியாவில் அமைக்க வேண்டும் என்று இந்திய அணித் தேர்வுக்குழு தலைவர் வெங்சர்க்கார் கூறியுள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு:-

''இந்திய இளம் வேகப் பந்துவீச்சாளர்களுக்கு உதவக்கூடிய வகையில் நம்முடைய ஆடுகளங்களை மாற்றியமைக்க வேண்டும். இந்தியாவில் உள்ள ஆடுகளங்களை எல்லாம் சுழல் பந்துவீச்சுக்கு ஏற்றவை. இந்திய ஆடுகளங்களில் பந்து எழும்பி வரக்கூடிய வகையிலான ஆடுகளங்களை அமைக்க வேண்டும். எல்லா ரஞ்சிக் கிண்ண போட்டிகளையும் இது போன்ற ஆடுகளங்களில் நடத்த வேண்டும். மேலும் ரஞ்சிக் கிண்ணப் போட்டிகளை பொதுவான மைதானங்களில் நடத்த வேண்டும்.'' - இவ்வாறு அவர் கூறினார்.




# இனிமேல் இந்தியாவில் விளையாடமாட்டேன்!

## சானியா அதிரடி அறிவிப்பு

ஹைதராபாத், பெப்.06

''சர்ச்சைகளால் மிகவும் சோர்ந்து போய் விட்டேன். இந்தியாவில் விளையாடும் ஒவ்வொரு தொடரின் போது ஏதாவது பிரச்சினைகள் உருவாகின்றன. இதனால் இந்தியாவில் நடக்கும் போட்டிகளில் பங்கேற்பதைத் தவிர்க்கவிருக்கிறேன்.''

- இவ்வாறு இந்திய டெனிஸ் மங்கை சானியா மிர்ஷா அதிரடியாக அறிவித்துள்ளார்.

இந்திய டெனிஸ் வீராங்கனை சானியா மிர்ஷாவை சமீபகாலமாக சர்ச்சைகள் துரத்தி வருகின்றன. சமீபத்தில் ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடந்த ஹோப்மன் கிண்ணத்துக்கான டெனிஸ் தொடரில் சானியா பங்கேற்றார். அப்போது சானியா, மூவர்ணக் கொடிக்கு முன்பாக கால் வைத்திருந்தார். இது தொடர்பான படங்கள் வெளியாக, பெரும் சர்ச்சை வெடித்தது. இதையடுத்து இவர் மீது தேசிய கொடி அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டது. தொடரும் சர்ச்சைகளால் நொந்து போன சானியா, இனி இந்தியாவில் நடக்கும் போட்டிகளில் பங்கேற்கப் போவதில்லை என்றும் பெங்களூர் பகிரங்க டெனிஸ் தொடரிலும் விளையாட மாட்டார் என்றும் அறிவித்துள்ளார்.

## நியூஸிலாந்துடனான ருவென்ரி/20 போட்டி

# மஸ்கரீனாஸ் சகலதுறையிலும் பிரகாசிப்பு 32 ஓட்டங்களால் இங்கிலாந்து வெற்றி

அக்லண்ட், பெப்.06

நியூஸிலாந்து அணிக்கு எதிராக நேற்று நடைபெற்ற முதலாவது ருவென்ரி/20 போட்டியில் இங்கிலாந்து அணி 32 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. துடுப்பாட்டத்தில் தொடர்ச்சியாக 4 சிக்ஸர்களை விளாசி 14 பந்துகளில் 31 ஓட்டங்களைச் சேர்த்த மஸ்கரீனாஸ், பந்துவீச்சில் 2 முக்கிய விக்கெட்டுகளைக் கைப்பற்றி தனது அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றினார்.

இங்கிலாந்துக் கிரிக்கெட் அணி நியூஸிலாந்திற்குச் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகின்றது. இவ்விரு அணிகளும் முதலில் 2 போட்டிகளைக் கொண்ட ருவென்ரி/20 தொடரில் பங்கேற்கின்றன. அதன் பின்னர் 5 ஒருநாள் போட்டிகளிலும், 3 டெஸ்ட் போட்டிகளிலும் இரு அணிகளும் மோதுகின்றன.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ருவென்ரி/20 போட்டி நேற்று அக்லண்டில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து பதில் அணித்தலைவர் பிரண்டன் மக்கியூலம் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.




அதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இங்கிலாந்து அணியை ஆரம்பத்தில் கிறிஸ் மாட்டின் அச்சுறுத்தினார். இவரது வேகத்தில் ஆரம்ப வீரர்களான பில் மஸ்ரட் (20), லூக்கி ரைற்(1) ஆகியோர் விரைவாக வெளியேறினர்.

தொடர்ந்து களமிறங்கிய பீற்றர்ஸன் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். இவருக்கு மறுமுனையில் ஓரளவு ஒத்துழைப்பு அளித்த பெல் 12 ஓட்டங்களையும், கொலிங்வூட் 26 ஓட்டங்களையும், ஒயிஸ் ஷா 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். அதிரடியாக ஆடிய பீற்றர்ஸன் 23 பந்துகளில் ஒரு சிக்ஸர், 6 பவுண்டரிகளுடன் 43 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து ஜீற்றன் பட்டேலின் பந்துவீச்சில் பவிலியன் திரும்பினார்.

அடுத்துக் களம்புகுந்த மஸ்கரீனாஸின் ஆட்டத்தில்அனல்பறந்தது. போட்டியின்16ஆவது ஓவரின் கடைசி 4 பந்துகளையும் சிக்ஸர்களாக விளாசி வேடிக்கை காட்டிய அவர், 31 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து மில்ஸின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

இறுதியில் இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 154 ஓட்டங்களைச் சேர்த்தது. சுவான் 15 ஓட்டங்களுடனும், சைட்பொற்றம் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

நியூஸிலாந்தின் பந்துவீச்சில் மில்ஸ், மாட்டின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ஒரம், பட்டேல், சௌத்தி, ரைடர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இலக்கைக் கலைத்த நியூஸிலாந்து அணிக்கு சைட்பொற்றமின் வேகம் ஆரம்பத்திலேயே அதிர்ச்சியளித்தது. இவரது வேகத்தில் மக்கியூலம் 9 ஓட்டங்களுடனும் ரோஸ் ரெய்லர் ஓட்டமெதுவும் பெறாமலும் விரைவாக நடையைக் கட்டினர். அடுத்து வந்த ஜிம்மி கௌவ் வெறும் 6 ஓட்டங்களுடன் மஸ்கரீனாஸின் வேகத்தில் ஆட்டமிழந்தார். அதிரடி காட்டுவார் என எதிர்பார்க்கப்பட்ட ஸ்ரைரிஸும் ஓர் ஓட்டத்துடன் மஸ்கரீனாஸின் பந்துவீச்சில் 'போல்ட்' ஆனார்.

ஓரளவு நிதானமாக ஆடிய ஆரம்ப வீரர் ரைடர் 22 ஓட்டங்களுடன் மஸ்கரினாஸினால் 'ரன் அவுட்' செய்யப்பட்டார். ஒரு முனையில் விக்கெட்டுகள் அடுத்தடுத்து இழக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும் மறுமுனையில் ஜேக்கப் ஒரம் தனது போராடும் குணத்தை வெளிப்படுத்தினார். அதிரடி காட்டிய இவரால் அடைய வேண்டிய இலக்கைத் தொட முடியாமல் போக நியூஸிலாந்து அணி 19.2ஆவது ஓவரில் 152 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. கடைசி விக்கெட்டாக ஜேக்கப் ஒரம் 61 ஓட்டங்களுடன் (40 பந்துகள், 7 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் ) சைட்பொற்றமின் பந்துவீச்சில் வீழ்த்தப்பட்டார். இந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக சகலதுறைகளிலும் பிரகாசித்த மஸ்கரீனாஸ் தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது ருவென்ரி/20 போட்டி நாளை நடைபெறவுள்ளது.

# ஆஸ்திரேலியா மறுத்தால் தொடர் ரத்து; வேறு நாட்டில் நடத்த வாய்ப்பில்லை!

## பாக். கிரிக்கெட் சபை அறிவிப்பு

கராச்சி, பெப்.06

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள ஆஸ்திரேலிய அணி மறுத்தால், அந்த அணியுடனான கிரிக்கெட் தொடர் ரத்து செய்யப்படும் என அறிவித்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, மேற்படி தொடரை வேறு நாட்டில் நடத்துவதற்கான வாய்ப்பு இல்லை என்றும் கூறியுள்ளது.

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணி எதிர்வரும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாட வேண்டும். எனினும் பாகிஸ்தானில் தற்போது அரசியல் ரீதியாக கொந்தளிப்பான நிலை நிலவி வருவதால் ஆஸ்திரேலிய வீரர்கள் இந்த சுற்றுப் பயணத்தை மேற்கொள்ள தயங்கிவருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

சைமண்ஸ் போன்ற வீரர்கள் பாகிஸ்தானுக்குச் செல்லாமல் தவிர்ப்போம் என்று வெளிப்படையாகவே கருத்துத் தெரிவித்துள்ளனர். இதனிடையே பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தத் தொடரை வேறொரு நாட்டில் அல்லது ஆஸ்திரேலியாவில் வைத்துக் கொள்ளலாம் என்று ஆஸ்திரேலியா சார்பில் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இதனை நிராகரித்துவிட்டது. எந்தச் சூழ்நிலையிலும் வேறொரு நாட்டில் இந்தத் தொடரை ஆட பாகிஸ்தான் சம்மதிக்காது என்று அந்நாட்டுக் கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். டுபாயில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. கூட்டத்தின் போது இதுதொடர்பாக அந்நாட்டுக் கிரிக்கெட் சபைத்தலைவர் ஆலோசனை நடத்த இருக்கிறார்.

ஆஸ்திரேலிய அதிகாரிகள் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து அங்குள்ள பாதுகாப்பு நிலை பற்றி அறிக்கை சமர்ப்பிப்பார்கள் என்று தெரிகிறது. அதன் அடிப்படையில் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் குறித்து ஆஸ்திரேலியா இறுதி முடிவெடுக்க உள்ளது.

ஒருவேளை ஆஸ்திரேலியக் குழு பாகிஸ்தானில் ஆடுவது பாதுகாப்பானது அல்ல என்று தெரிவித்தால், சர்வதேச கிரிக்கெட் சபை தன்னுடைய குழு ஒன்றை அனுப்பி பாகிஸ்தானில் நிலைமையை ஆய்வு செய்யும் என்று கூறப்படுகின்றது.

இந்தக் குழு பாகிஸ்தானில் ஆடலாம் என்று பச்சைக்கொடி காட்டினால் ஆஸ்திரேலிய அணி சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவேண்டும் என்று பாகிஸ்தான் நிர்ப்பந்திக்கும் எனத் தெரிகிறது.

அவ்வாறு ஆஸ்திரேலியா விளையாட மறுத்தால் பாகிஸ்தான் அணி சுற்றுப் பயணத்தையே ரத்து செய்துவிடும் என்று கூறப்படுகின்றது. இதற்காக ந[illegible] கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

# சுழல் பந்துவீச்சில் அதிக அக்கறை

## தென்னாபிரிக்கப் பயிற்சியாளர் கருத்து

கேப்டவுண், பெப்.06

இந்தியாவிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்கா அணி சுழல் பந்துவீச்சில் அதிக கவனம் செலுத்தும் என்று அந்த அணியின் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்க அணி அடுத்த மாதம் இந்தியா வருகை தந்து மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. கடந்த முறை தென்னாபிரிக்க அணி இந்தியா வருகை தந்தபோது தோல்வியடைந்தது.

இந்த முறை இந்தியாவிற்கு எதிரான தொடரில் சிறப்பாக விளையாடுவதற்காக தென்னாபிரிக்கா புதிய திட்டத்தை வகுத்துள்ளதாகத் தெரிவித்துள்ள அந்த அணியின் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர், சுழற்பந்து வீச்சில் கவனம் செலுத்த முடிவு செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

டெஸ்ட் போட்டிகள் நடைபெறவுள்ள சென்னை உள்ளிட்ட மைதானங்கள் சுழல் பந்துவீச்சுக்கு ஏற்றது என்பதால் அதற்கேற்ப தென்னாபிரிக்க அணி திட்டமிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தியப் பயணத்தின் போது இரண்டு சுழல் பந்துவீச்சாளர்கள் தென்னாபிரிக்க அணியில் இடம்பெறுவார்கள் என்றும் மிக்கி ஆர்தர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்... நிகழ்வுகள்...



வடமராட்சி கிழக்கு குடத்தனை கரையூர் அ.மி.த.க பாடசாலையில் அண்மையில் கால் கோள் விழா பாடசாலை அதிபர் இ.சதாசிவம் தலைமையில் நடைபெற்றது நிகழ்வில் மாணவர்கள் கௌரவிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். (203)



துன்னாலை காசிநாதர் வித்தியாலய அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறிச் செல்லும் என்.பரமானந்தனின் சேவைநலன் பாராட்டு விழாவும் மணிவிழாவும் அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

மணி விழாநாயகன் பரமானந்தன் தம்பதியினருக்கு ஆசிரியை திருமதி சாந்தி ஆனந்த மூர்த்தி வாழ்த்துப்பா கையளிப்பதைப் படத்தில் காணலாம். (275)




யாழ்.வலய சித்திரபாட முன்னாள் சேவைக்கால ஆலோசகரும் ஓவியருமான செ.வரதராஜன் கலாபூசணம் விருது பெற்றமையை முன்னிட்டு திருநெல்வேலி இ.த.க.பாடசாலையில் கௌரவிப்பு நிகழ்வு நடத்தப்பட்டது.

நிகழ்வில் கலாபூசணம் செ.வரதராஜனுக்கு பாடசாலை அதிபர் எம்.கஜேந்திரன் மாலை அணிவிப்பதையும் அருகில் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் நிற்பதையும் படத்தில் காணலாம். (203)



சிவபூமி அறக்கட்டளை நிறுவன அனுசரணையுடன் உரும்பிராய், திருநெல்வேலி வட்டம், அச்சுவேலி வட்டம், கொக்குவில் லயன்ஸ்கழகங்கள் இணைந்து உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நடத்திய இலவசக் கண் [illegible] எடுக்கப்பட்ட படம். (203)

# அபிராமிப்பட்டருக்கு அம்பிகை அருள்செய்த சிறப்புக்குரிய நன்னாள் தை அமாவாசை



ஆதிபராசக்தியாக விளங்குகின்ற அம்பிகைக்குரிய நாள் இந்தத் தை அமாவாசை இன்றைய தை அமாவாசை நன்னாளில் விரதங்காத்து அம்பாளை வழிபட்டால் பூமியில் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழலாம் என்று கூறப்படுகிறது.

அம்பாள் அருள்பாலித்தருளும் ஆலயங்களிலெல்லாம் இன்று இது பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. தமிழகத்தில் மயிலாப்பூரில் இவ்விழா மிக விசேடமாக நடைபெறுவது வழக்கமாகும்.

'அபிராமிப்பட்டர்' எனும் அன்பர் அம்பிகையை உபாசிப்பவர் அந்த அபிராமிப் பட்டர் அம்பாளின் அருட் பிரவாக திவ்ய ஒளியில் லயித்திருந்த போது ''இன்று அமாவாசையா? பௌர்ணமியா?'' என்று அரசன் கேட்க அவரும் நிலை தடுமாறி '' இன்று பௌர்ணமி'' என்றுசொல்லி விட்டார். பின்னர் அரசனுக்கு அதை நிரூபிக்கு முகமாக 'அபிராமி அந்தாதி' பாடி எழுபத்தொன்பதாவது பாடலில் 'விழிக்கே அருளுண்டு' என்று பாடும் பொழுது அம்பிகை பிரத்தியட்சமாகி தனது காதுத்தோடு ஒன்றைக் கழற்றி வானத்திலே வீச அது பூரண சந்திரனாகக் காட்சியளித்தாக புராணம் கூறுகிறது.

நிலத்திலே குழிவெட்டித் தீ மூட்டி நடுவில் உறியிலே ஏறித் தாம் அமர்ந்து கொண்டார் அபிராமிப்பட்டர். நூறு பாடல்கள் கொண்ட அபிராமி அந்தாதிக்காக ஒவ்வொரு பாட்டுக்கும் ஒவ்வொரு கயிறாக அறுத்துக்கொண்டு வந்தார் எனக் கூறப்படுகிறது. ஈற்றில் அம்பிகையின் அருள் கிட்டி இந்த அற்புதம் நிகழ்ந்ததால், தை அமாவாசை நாளை விரதமிருந்து அம்பாளைப் பூஜிக்கும் நாளாக ஆன்றோர் கருதி வருகின்றனர்.

''தனந்தரும் கல்விதரும், ஒரு நாளுந் தளர்வறியா மனந் தரும், தெய்வ வடிவுந் தரும்; நல்லன எல்லாம் தரும்' என்று கூறுகின்றார். அபிராமிப் பட்டர். யாருக்கு? தன்னை நம்பி வழிபடும் அடியவர்களுக்கு அம்பாள்இவை அனைத்தையும் அருள் வார். ஆதலால் இன்றைய தை அமாவாசை நாளில் விரதமிருந்து அம்பாளை வழிபடுவோமானால் சகல சௌபாக்கியங்களும் கைவரப் பெற்று நாம் பூமியில் சுகதேகிகளாக வாழலாம்.

அந்தவகையில் இன்றைய புனித நன்னாளில் நாட்டில் இனியாவது துன்பங்கள் அனைத்தும் நீங்கி, சந்தோஷசமாதான சகவாழ்வு மலர வேண்டு மென்று எல்லாம் வல்ல அம்பாளின் அருள் வேண்டிப் பிரார்த்திப்போமாக.

*சைவப்புலவர்*
**இராசையா ஸ்ரீதரன்.**

# "நொறுங்கிய நலிந்த நெஞ்சத்தினரோடும் நான் வாழ்கிறேன்."

இதோ மீண்டும் நாம் ஒரு தவக்காலத்தில் நம்பயணத்தை ஆரம்பிக்கிறோம். இக்காலம் ''மனம் திருந்தி, நற்செய்தியை நம்பும் காலம்'', ''மண்ணக வாழ்வினூடாக விண்ணக வாழ்வை பெறும் காலம்'' இன்று நம் ஒவ் வொருவரின் நெற்றியிலும் இடப்படும் சாம்பல் எதை நமக்கு உணர்த்தப் போகின்றது.

1.ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால், மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்''. (தொட.நூ 2:7) நாம் இறைவனால் உருவாக்கப்பட்டவர்கள். எனவே இறைவனிற்குரியதையே எம் வாழ்வில் நாம் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

2.சாம்பல் கருமையாய் உள்ளது. அதுபோல் பாவம் என் வாழ்வில் என் உயர்ந்த அழகிய வாழ்வை வாழ விடாமல் செய்கின்றது. எனவே என்னை மகிழ்ச்சியோடு வாழ விடாமல் என்னை அழிக்கும் பாவசக்தி எனக்குள் எப்படி செயலாற்றுகின்றது என்பதை நான் காண வேண்டும்.

எனவே இந்த நாள்களில் நான் என்ன செய்யப்போகின்றேன்? பிச்சை இடுதல், பரித்தியாகம், பரிசுத்தனம் என்ற மூன்று நெறிகளை நாம் கடைப்பிடிக்க வேண்டுமென, நமக்கு பழங்காலம் முதல் நம் அன்பின் திருச்சபைத்தாய் தன் கருவூலத்திலிருந்து கற்றுத் தருகின்றாள்.

**பிச்சை இடுதல்**

முதலில் நான் என் நிலை உணர்ந்து எனக்கே உதவ முன்வரவேண்டும். என் நிலை உணர்வதற்கு என்னை நான் ஏற்க வேண்டும், என்னை முழுமையாய் அன்பு செய்யவேண்டும். என்னுள் உள்ள மனிதத்தை காணாமல், தான் மற்றவரை காண முடியாது, மதிக்க முடியாது, உதவி செய்ய முடியாது. என்னை நான் ஏற்காத போதுதான் நான் எனக்கும், அயலவரிற்கும் தீங்கு செய்கின்றேன்.


## திருநீற்றுப் புதன்

**பரித்தியாகம்:**

தனக்கென எதையும் கொள்ளாது, அனைத்தையும் எனக்காக தந்த இயேசுவைப் போல், நானும் என்னை ஆண்டவருக்குள் அர்ப்பணமாக்கிடல் வேண்டும். உண்மையில் நான் என்னை இறைவனிற்காய் அர்ப்பணிக்க, என்னுள் நான் இறக்க வேண்டும். என்னை இறைவனின் [illegible] இருந்து பாழாக்கும் பழக்க தோசங்களிற்கு நான் மடிய வேண்டும்.

**பரிசுத்த தனம்:**

பரிசுத்த தனம் என்பது எனக்குள் இறைவனால் பதிக்கப்பட்டுள்ள என் 'வாழ்வு' அல்லது 'இருப்பு' /நிலையே இயேசு ஆண்டவர் அவ் அழைப்பை எனக்கு தருகின்றார் அல்லவா? ''என் தந்தை பரிசுத்தராய் இருப்பது போல் நீங்களும் பரி சுத்தராய் இரு ங்கள்''. (மத்: 5:48) ஆகவே நான் என்னை முழுவதும் இயேசு ஆண்டரில் இணைக்க வேண்டும். ஆண்டவரையே என் வாழ்வின் எல்லாமாக கொள்ளல் வேண்டும். என்




முழுமையும் ஆண் டவ ரின் ஆட்சிக்குள் அர்ப்பணிக்க வேண் டும். என் சிந்தனை, சொல், செயல் ஒவ் வொன்றையும் இயேசு ஆண்டவருள் செபமாக மாற்ற வேண்டும். பரிசுத்த தனம் இறைவனின் உன்னத கொடை என்றால் செபவாழ்வு தான் இக்கொடையை எமது அனுபவமாக்கும் பாலம் அல்லது கருவி.

தேடுதலே செபம்!
பற்றிக் கொள்வதே செபம்!
விருந்துவைப்பதே செபம்!
விழித்திருப்பதே செபம்!
சொந்தமாவதே செபம்!
இறக்கவும் தயாராக இருப்பதே செபம்!

ஒருவரியில் சொன்னால், ஆண்டவர் மீது நாம் கொள்ளும் ஆசையேசெபம்! (அர்த்தமுள்ள ஆன்மீகம்)

* நான் இத்தபசுகாலத்தில் என் வாழ்வைஉண்மையாய் நேசிப்பதற்காய்என்ன செய்யப் போகின்றேன்?
* என்னுள் நான் என்னை முன்னிட்டு பெருமைப்படுபவை எவை?
* என்னுள் நான் என்னை முன்னிட்டு சிறுமைப்படுபவை எவை?
* மாற்றங்காண என்ன செய்யப் போகின்றேன்.

**அல்பேட் ஜோ. அருள்ராஜா C.M.F**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு இலங்கையின் சுதந்திரம் அர்த்தமற்றது அவர்களின் போராட்டம் இலக்கை அடையவேண்டும்

## கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்

யாழ்ப்பாணம், பெப்.6

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இலங்கையின் சுதந்திரம் அர்த்தமுடையதாக அமையவில்லை.



சுதந்திரத்துக்கான தமிழர்களின் போராட்டம்தொடர்கிறது. அது விரைவில் நியாயமான இலக்கை எட்ட வேண்டும் என்பதையே நாங்கள்விரும்புகிறோம். இப்படித் தெரிவித்தார் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன். நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இலங்கை சுதந்திர தினகொண்டாட்டங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது;

இலங்கையில் வாழ்கின்ற பெரும்பான்மைச்சிங்கள மக்கள் சுதந்திரத்தை கொண்டாடுகின்றார்கள்; அதை நாங்கள் பாராட்டுகின்றோம். ஆனால், தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரையில் அந்தச் சுதந்திரம் அர்த்தமுள்ளதாக அமையவில்லை. ஏனெனில் சரித்திர ரீதியாக நாங்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்களில்-உலக நாடுகளில் உள்ளமை போன்று-ஆட்சி புரியக் கூடிய ஒழுங்குகள் தமிழ் மக்களுக்கு அமையவில்லை. அதன் காரணமாக நாங்கள் பல விதமான புறக்கணிப்புகளுக்கு, பாதுகாப்பற்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். ஆக, சுதந்திரம் குறித்து நாங்கள் மகிழ்ச்சிப்படுவதற்கு ஒன்றுமில்லை- என்றார்.

இலங்கையின் 60 ஆவது சுதந்திரதின நிகழ்ச்சிகள் தொட்பாகக் கருத்துத் தெரிவித்த மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கிசோதி சரவணமுத்து கூறியதாவது;

எமது நாட்டின் அங்கீகாரம், மிகவும் பாரதூரமான தவறுகளுக்கு முகங் கொடுத்து வருகின்றது என்பது மிகவும் துரதிஷ்டவசமான ஒரு விடயமாகும். இலங்கை வாழ் மக்கள் மத்தியில் ஒற்றுமை கிடையாது. அவர்கள் அனைவரினதும் அரசியல் அபிலாஷைகளை திருப்திப்படுத்தக் கூடியவகையிலானஅரசியல்ஆட்சிமுறையை-வடிவத்தை-இன்னும் அவர்கள் தேடிக் கொண்டிருக்கிறார்கள்-என்றார்.

மூத்த அரசியல்வாதி ஏ.எச்.எம். அஸ்வர் கூறுகையில்;-

இலங்கையில் இனச்சிக்கல்கள், தனிச் சிங்களச் சட்டம் 1956 இல் கொண்டு வரப்பட்ட பின்னரே அதிகரித்தன. இது இன்று பூதாகாரமாக வெடித்திருக்கின்றது. 60 ஆண்டுகளுக்குப் பிறகாவது எங்கள் சிந்தனை தெளிய வேண்டும். இந்த நாடு எல்லோருக்கும் சொந்தமானது. ஆகவே பிரச்சினைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்-என்றார்.

(அ-2)

# அபிராமிப்பட்டர் விழா

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அம்பாள் அறிவாலயத் திறப்பு விழாவும் அபிராமிப்பட்டர் விழாவும் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் அறிவாலயத்தை நல்லை ஆதீன முதல்வா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திறந்து வைக்க பெயர்ப்பலகையை பேராசிரியர் கா.குகபாலன் திரைநீக்கம் செய்து வைப்பார்.

நிகழ்வில் அறிவாலயத்திற்கான நூல்கள் அன்பளிப்பு, சிறப்புரைகள் என்பன இடம்பெறும்.

அறிவாலயத்திற்கான ஒரு தொகுதி நூல்களை வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுத் தலைவர் ப.க. பரமலிங்கம் கையளிக்கவுள்ளார். (203)

* * *

சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அபிராமிப்பட்டர் விழாவும் 'சிவசக்தி ஞானநந்தம்' என்னும் நூலின் வெளியீடும் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

சிவஸ்ரீ சி.தம்பையாக் குருக்கள் வீரபத்திர சிவகுருக்கள் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராகச் சாவகச்சேரி கிராம அலுவலர் வை. இராசரத்தினம் கலந்துகொள்வார். (202)

## 'காவிய நாயகன்' பிரதி வழங்கும் நிகழ்வு

திருமறைக் கலாமன்றத்தின் தவக்கால ஆற்றுகையாக யேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு முதலியவற்றை நினைவு கூரும் முகமாக எதிர்வரும் மார்ச் 13, 14, 15,16 ஆகிய திகதிகளில் மேடையேற்றவிருக்கும் பேராசிரியர் அருட்கலாநிதி நி.மரியசேவியர் அடிகளாரின் ''காவிய நாயகன்'' என்னும் தவக்கால ஆற்றுகையின் பிரதிகள் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்குத் திருமறைக் கலாமன்றக் கலைத்தூது மணி மண்டபத்தில் நடிகர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

''காவிய நாயகன்'' நாடகப் பிரதியினை யாழ்.மறைக்கோட்ட குரு முதல்வர் அருட்திரு மைக்கல் சௌந்தரநாயகம் அடிகள் வழங்குவார். இவ்வாற்றுகைக்குரிய நெறியாள்கையை யோ.யோண்சன் ராஜ்குமார் ஏற்றுள்ளார். (203)



வதிரி டயமெண்ட் விளையாட்டுக் கழகத்தினரால் அண்மையில் இரத்ததானம் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினரால் குருதிக் கொடையாளி ஒருவர் பரிசோதனை செய்யப்படுவதையும் இளைஞர்கள் இரத்த தானம் வழங்குவதையும் படங்களில் காணலாம். *(படங்கள் : கரவெட்டிச் செய்தியாளர்)*

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், பெப்.6

நல்லூர் பாணான்குளம் நாச்சி அம்பாள் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை இதற்கான கிரியாகால நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4 மணிக்குப் பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும்.

தொடர்ந்து கிரியைகள் இடம்பெற்று 11 ஆம் திகதி 9.36 மணியளவில் தூபிகள் கும்பாவிஷேகமும் 10.36 மணியளவில் மகா கும்பாபிஷேகமும் இடம்பெறும்.

தொடர்ந்து அன்னதானம் நடைபெறும். பிற்பகல் 3 மணிக்கு விசேட பூசைகள் இடம்பெற்று அம்பாள் வீதியுலா வருவார். (203)

* * *

சங்கானை, பெப்.6

சங்கானை நிகரையம்பதி சாமுண்டா தேவி சமேத ஞான வைரவர் ஆலய மணவாளக் கோலமும் அலங்காரத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை மணவாளக் கோலம் இடம்பெறும்.

மறுநாள் திங்கட் கிழமை காலை 8 மணிக்கு அபிஷேக ஆராதணைகளுடன் அலங்காரத் திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும். (203-29)

# பல்கலைக்கழக அனுமதி வீதத்திற்கு ஏற்றவாறு மாணவர்களின் கல்விச் சிந்தனை அமையவேண்டும்

## தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கருத்து

யாழ்ப்பாணம், பெப்.6

பல்கலைக்கழகங்களில் அனுமதி வீதம் ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதற்கு ஏற்றவாறு மாணவர்களது கல்விச் சிந்தனைகள் நீண்ட நோக்குக் கொண்டதாக அமைய வேண்டும்.

இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார் தீவக வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன்.

நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலய மெய்வன்மைப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்:-

பல்கலைக் கழகங்களில் அனுமதி அதிகரிப்புக்கு ஏற்ப பாடசாலைகளில் இருந்து ஆண்டுதோறும் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும். தெளிவான சிந்தனை, தூர நோக்கு இருந்தால் மட்டுமே இதனை சாதிக்க முடியும்.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் அதிக வீதத்தினரைச் சித்தியடையச் செய்வதன் மூலம் உயர்தர வகுப்புகளில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும்.

ஜி.சீ.ஈ. சாதாரணதர வகுப்புகளில் தெரிவுப் பாடங்களில் எமது பாரம்பரிய முறைகளைக் கைவிட்டு விட்டு புதிய பாடங்களைத் தெரிவு செய்து கற்பிக்க வேண்டும்.

தொடர்பாடல் ஊடகக் கற்கை, தகவல் தொழில்நுட்பம், நிர்மாண தொழிநுட்பம், அழகியல் போன்ற பல்வேறு பாடங்கள் உள்ளன.

பல்கலைக்கழகங்கள் ஆண்டுதோறும் உள்வாங்கும் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கும் போது புதிய நெறிகளையும் அறிமுகப்படுத்துகின்றது. அத்தகைய நெறிகளுக்குச் செல்வதற்கு உயர்தரத்தில் புதிய பாடங்களைத் தெரிவுசெய்த மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. எனவே காலத்திற்கு ஏற்ப புதிய சிந்தனை பரிமாணங்களைப் பாடசாலைச் சமூகம் உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

அதிபர், ஆசிரியர்களின் மனோதிடம், நேரிய சிந்தனை மாத்திரமே கல்வியின் உயர்வுக்கு வழிகாட்டும்.

எனவே கல்விப் புலத்திலுள்ள அனைத்து ஆசிரியர்களும் அதிபர்களும், மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்.

தற்கால கல்வி முறையில் பாடசாலைகளுக்குப் போதிய நிதிவளம் கிடைக்கிறது. ஆசிரிய, ஆளணிவளம் விடுவிக்கப்பட்டுள்ளது. இவற்றை உள்ளீடாகக் கொண்டு செயற்படுத்த வேண்டிய பொறுப்பு பாடசாலைக்குரியது. பாடசாலை சமூகத்திற்குரியது. பாடசாலைச் சமூகம் விழிப்புடன் செயலாற்றினால் கிராமிய பாடசாலைகள் துரிதமாக வளர்ச்சி பெற சந்தர்ப்பம் உருவாகும் - என்றார். (203)

## உள்ளூர் உருளைக்கிழங்கு விற்பனைக்கு வந்துள்ளது

சங்கானைச் சந்தையில் உள்ளூர் உருளைக்கிழங்கு விற்பனைக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒரு கிலோ கிழங்கு 80 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது எனவும் இம்முறை விவசாயிகள் குறைந்த அளவிலேயே இச் செய்கையில் ஈடுபட்டதாகவும் கூறப்பட்டது. (203-29)

# நகுலேஸ்வரர் ஆலயப் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், பெப்.6

கீரிமலை நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரசுவாமி ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது.

தினமும் விசேட பூசைகள் இடம்பெற்று சிவராத்திரி தினத்தன்று விசேட நிகழ்வுகள் இடம்பெறும்.

தினமும் பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனை, நற்சிந்தனை, வில்லிசை போன்ற நிகழ்வுகள் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருவிழாவில் கலந்துகொள்ளும் பக்தர்களின் நலன்கருதி தெல்லிப்பழை, சேந்தாங்குளம் சோதனைச் சாவடியில் இருந்து விசேட பஸ்சேவைகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று ஆதீன கர்த்தா ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

இதேவேளை திருவிழா நாட்களில் தினமும் அன்னதானம் இடம்பெறும். (203 - 29)

# அச்சுறுத்தலால் சரணடைந்தோரின் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு நீதிமன்றத்தால் வசதிகள்

யாழ்ப்பாணம்,பெப்.6

உயிர் அச்சுறுத்தல் காரணமாகச் சரணடைந்துள்ள பெற்றோரின் பிள்ளைகள் பாடசாலைக் கல்வியைப் பெறுவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.நீதிமன்றம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

உயிர் அச்சுறுத்தல் காரணமாகச் சரணடைந்தவர்களின் 9 பிள்ளைகளுக்கே இந்த வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

அச்சுறுத்தல் காரணமாகப் பெண்கள், சிறுவர்கள் உட்பட 22 பேர் மேல் நீதிமன்றக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

யுனிசெவ், சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியன இந்த மாணவர்களின் கல்விக்கு வேண்டிய உதவிகளைச் செய்துள்ளன. அத்துடன் இவர்களுக்கான உடுபுடைவைகள் மற்றும் பாத்திர உதவிகளைக் கானான் சிறுவர் இல்லம் வழங்கியுள்ளது.

யாழ்.நீதிமன்றத்தால் அமர்த்தப்பட்ட ஓட்டோ ஒன்றில் அருகில் உள்ள பாடசாலைகளுக்கு இவர்கள் சென்று வருகின்றனர் என்று நீதிமன்றம் மேலும் தெரிவித்துள்ளது. (203)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இல்லத்தரசிகளுக்கு ஓர் இனிப்பான செய்தி!!!

**சுத்தமான தேங்காய்ப் பால் கிறீம்!**

தேங்காயின் விலை உயர்ந்துள்ள இந்நிலையில் ஒரு தேங்காய்ப்பால் அளவான கிறீம் (50 கிராம்) பைக்கற் 23/= விலையில்


ஒரு பைக்கற் கிறீமினை மூன்று சில்வர் கப் கடுதண்ணீரில் கரைப்பதன் மூலம் மூன்றுகப் முதல்தரப் பாலினைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்:

**அம்பிகை களஞ்சியம்**

304, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (70785)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கடந்த 8 வருடங்களாக ஆசிரியராகக் கடமையாற்றி, அளப்பரிய சேவை புரிந்து 01.02.2008 அன்று இறைபதம் அடைந்த

**மார்க்கண்டு ஸ்ரீதரன்**

*(ஆசிரியர்)* அவர்களுக்கு எங்கள் கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து, அன்னாரின் குடும்பத்தினர்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்,
சித்தன்கேணி. (70835)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலைச் சமூகம்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவநாயகி சண்முகராசா



தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவநாயகி சண்முகராசா 04.02.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திருமதி ஞானபூங்கோதை இராசதுரை, காசிவிஸ்வநாதன் ஆகியோரின் சகோதரியும் வரோதயம், நிரஞ்சனாதேவி, சண்முகதேவி, கமலோதயம் (ஆசிரியர், சன்மார்க்க ம.வி.), துளசிதாஸ், தர்மினி, பத்மினி ஆகியோரின் பாசமிகு தாயும் இரட்ணஜோதி, இராமச்சந்திரன் (இளைப்பாறிய முகாமையாளர், இலங்கை வங்கி), காசிலிங்கம், பாரதிதாசன் (தபாலதிபர், சுண்டிக்குளி), புஸ்பமலர், கோபாலகிருஸ்ணன், ஜெகநாதன் ஆகியோரின் மாமியும் சாயீஸ்வரன், விஜயராகவன் (செலான்வங்கி), காயத்திரி கிறிஸ்டீன், எலிசா, டோனி, கிருஷா, தனுஜா, சிந்துஷா, பிரகாஸ், பிரசாந், பிரவீன், மாதங்கி, மங்களசொரூபி, விஜயசுந்தர் ஆகியோரின் பேர்த்தியும் அருள்முகேசின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2008) புதன் கிழமை மு.ப.9மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தொண்டைமானாறு காட்டுப்புல மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சண்முகராசா
(கணவர்).

உடுப்பிட்டி வீதி,
தொண்டைமானாறு. (70832)

## வைக்கோல் விற்பனை

சுழிபுரம், சங்கானை வயல்களில் நெல் அறுவடையைத் தொடர்ந்து ஒரு பரப்பு வைக்கோல் நூற்றி ஐம்பது ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பெருமளவானோர் வந்து வைகோல் வாங்கிச் செல்கின்றனர் என்று கூறப்பட்டது. ஒரு றாக்ரரில் வைக்கோல் . ஏற்ற ரூபாய் ஆயிரத்து ஐந்நூறும் ஏற்றுக் கூலி தூரத்திற்கு ஏற்றவாறும் அறவிடப்பட்டு வருகிறது.

ஏற்றுக் கூலி வண்டில் கூலி வைக்கோலுக்கு மேற்பட்ட தொகையாகவுள்ளது. என்றும் தெரிவிக் கப்படுகிறது.(203-28)

## நல்லின பசுக்கள் வழங்கப்பட்டன

மஹிந்த சிந்தனையின் கீழ் உயர் இன இரண்டு பசுமாடுகள் சரவணையில் வழங்கப்பட்டுள்ளன.

இப்பசு மாட்டில் இருந்து ஒரு தடவை மட்டும் 4 லீற்றர் பால் பெறப்பட்டு லீற்றர் 40ரூபாவீதம் விற்பனை செய்யப்படுகின்றது என்று தீவக கால் நடை வைத்திய பிரிவு பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். அத்துடன் செட்டிப்புலம் பகுதிக்கு 15 கோழிக்கூடுகளும் வேலணை துறையூர் பகுதிக்கு 15 கோழிக் கூடுகளும் கால்நடை வளர்ப்போர் சங்கங்கள் ஊடாக வழங்கப் படவுள்ளன. கால் நடைவளர்ப் போர் சங்கத்தில் பதிவுகளை மேற் கொண்டவர்களுக்கு முதற் கட்டமாக இவை வழங்கப்படவுள்ளன.
(203-95)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 ★ 02 ★ 1932



மறைவு 18 ★ 01 ★ 2007

அமரர்

**சங்கரப்பிள்ளை கணேசரத்தினம்**

திதி: அமாவாசை

அன்னாரின் ஓராண்டு திதிக் கிரியைகள் இன்று (06.02.2008) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மஞ்சத்தடி, இணுவில். (70830) குடும்பத்தினர்.

# வாசகர் திருமுகம்

## முதியோர் அறிமுக அட்டையினால் எவருக்கும் பயனுண்டோ?

கடந்த நூற்றாண்டின் இறுதியில் அரச சமூக சேவைத் திணைக்களத்தினால் அறிமுகம் செய்யப்பட்டு பிரதேச செயலர்கள் மூலம் நாடெங்கிலும் நடைமுறைப் படுத்தப்பட்ட முதியோர் அறிமுக அட்டைகள் இன்று செயலிழந்து போய் எல்லோராலும் எல்லா ஸ்தாபனங்களிலும் அலட்சியப்படுத்தப்பட்டு வருவது வேதனைக்குரியது. முதியவர்களுக்கான சில முன்னுரிமைகளை அரச சேவை மற்றும் தனியார்ஸ்தாபனங்களிலும் பெற்றுக் கொள்ளமுடியும் என்று ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தென்னிலங்கையில் ஓரளவிற்கேனும் இந்த அறிமுக அடையாள அட்டைகளினால் முதியோர்கள் பயனடைந்து வருவது பற்றி அறிந்திருக்கிறோம். ஆனால் தமிழ் பிரதேசங்களில் இந்த அறிமுக அட்டைகளை எள்ளளவேனும் மதித்து செயற்படுத்துவதில்லை.

இன்றைய தினம் சேவையாற்றும் அதிகாரிகளான எதிர்கால முதியோர்களை தட்டிக் கேட்கவும் எவருக்கும் சக்தியில்லை. அதிகாரிகள் அரச பணிமனைகளில் வருடந் தோறும் ''முதியோர் தினத்தை'' ஊடகவியலாளர்களை வரவழைத்து அதிவிமரிசையாக இல்லாவிட்டாலும் சம்பிரதாயமாகக் கொண்டாடி மேலிடங்கட்கு அறிக்கை அனுப்புவார்கள்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் வைத்தியசாலைகளிலும், கூட்டுறவு சங்கங்களிலும் தனியார் ஸ்தானங்களிலும் முதியோர்கள் மணிக்கணக்காக அதிகாலையிலிருந்தே கால்கடுக்க வரிசையில் அவஸ்தைப்பட்டதை காணாதவர்கள் இருக்க முடியாது. அண்மையில் வெளியான சமூகத் சேவைத் திணைக்கள அறிவுறுத்தல்கள் சம்பந்தப்பட்ட பொறுப்பதிகாரிகளை விழிப்படையச் செய்யும் என்று திடமாகவே நம்புவோமாக.

-மனமுடைந்த விருந்தாப்பியர்
(வே. நடராசா)

தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

## சரசாலை பொது நூலகம்

19.01.2008ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் 3ஆம் பக்கத்தில் வாசகர் திருமுகம் என்ற பகுதியில் எஸ்.கோபிகா, சரசாலை என்பவரால் தெரிவிக்கப்பட்ட கருத்திற்கு சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் வி.சிவராஜலிங்கம் பின்வரும் விளக்கத்தை அனுப்பியுள்ளார்:

12.12.2007ஆம் திகதி முதல் இப்பிரதேசசபையின் செயலாளராக பொறுப்பேற்று பணிபுரிந்து வருகின்றேன். இப்பிரதேச சபையின் தலைமை அலுவலகம் கொடிகாமம் நகரில் இயங்கி வருகின்றது. இதன்கீழ் 6 உப அலுவலகங்களான மிருசுவில், கச்சாய், வரணி, சரசாலை, கைதடி, நாவற்குழி ஆகியன அமைந்துள்ளன. செயலாளருக்குரிய கடமையை பொறுப்பேற்ற பின்னர் உபஅலுவலகங்கள் யாவற்றையும் நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளேன். அப்போது சரசாலை பொது நூலகத்தில் மின்சார வசதிகள் வழங்கப்பட்டுள்ளமையையும், பொறுப்பதிகாரியாக ஒரு நிகழ்ச்சித்திட்ட உதவியாளரின் மேற்பார்வையில் நூலகர் ஒருவரும் நூலக சேவகர் பதவியில் இருவருமாக மூன்று ஊழியர்கள் பணிபுரிவது குறிப்பிடத்தக்கது. மற்றும் அலுவலக நடைமுறைக்கு ஏற்ற வகையில் கடமை நேரம் வரையறை செய்யப்பட்டு காலை 8.30 முதல் மாலை 4.15 வரையில் அலுவலகமும் நூலகமும் சேவையாற்றி வருவது அறியக் கூடியதாக உள்ளது.

குறித்த சேவைகளின் திருப்தி அற்ற நிலை காணப்பட்டிருப்பின் உப அலுவலகத்திற்கோ அல்லது தலைமை அலுவலகத்திற்கோ தெரிவித்து குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் ஆக்கபூர்வமான கருத்துக்கள் பெரிதும் வரவேற்கப் படுகின்றன.

வி.சிவராஜலிங்கம்
செயலாளர்.

சாவகச்சேரி பிரதேசபை, கொடிகாமம்

## தமிழர்கள் மூன்றாந்தரப் பிரஜைகளே!

தமிழுக்கு சம அந்தஸ்து, தமிழர்களுக்குச் சுதந்திரம், தமிழர்களுக்கு விடுதலை என்றெல்லாம் சிங்கள அரசியல்வாதிகள் இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் கூறி வருகின்றனர். ஆனால் நடைமுறையில் தாம் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே நடத்தப்படுவதாக தமிழர்கள் உணர்கின்றனர்; கூறுகின்றனர்.

இம்மாதம் நான்காம் திகதி கோலகலமாக நடைபெற்ற இலங்கையின் அறுபதாவது சுதந்திரதினக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் தமிழர்கள் இரண்டாந்தரப்பிரஜைகளும் அல்லர் மூன்றாந்தரப் பிரஜைகளே என்பதை நிரூபித்து விட்டன. சுதந்திரதினக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளின் இறுதி அங்கமாக கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. முதலில் சிங்களக் கலை நிகழ்ச் சிகளும் அடுத்ததாக ஸாஹிராக் கல்லூரி மாணவர்களின் முஸ்லிம் கலாசார நடனமும் இறுதியாக கதிரேசன் கல்லூரி மாணவர்களின் காவடியாட்டமும் இடம் பெற்றன. சுதந்திரதின நிகழ்வுகளில் தமிழருக்கு மூன்றாமிடத்தை வழங்கியதன் மூலம் தமிழர்கள் மூன்றாந்தரப் பிரஜைகளே என்பதை நிரூபித்து விட்டது அரசு.

ந.பரமேஸ்வரன்.


**COMPUTER EXPRESS**
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007 80% off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science<br>4 Months<br>~~8,250~~/= 1,650/= | Honours Diploma in Computer Science<br>5 Months<br>~~10,500~~/= 2,100/= | Diploma in Web page Designing<br>4 Months<br>~~8,250~~/= 1,650/= |
| Diploma in Graphic Desining<br>4 Months<br>~~8,250~~/= 1,650/= | Diploma in Desktop Publishing<br>4 Months<br>~~7,250~~/= 1,450/= | Diploma in Hardware Engineering<br>3 Months<br>~~7,250~~/= 1,450/= |
| Diploma in Auto CAD<br>3 Months<br>~~7,250~~/= 1,450/= | Diploma in Microsoft Office<br>3 Months<br>1,000/= | Accounting Package<br>3 Months<br>~~8,250~~/= 1,650/= |

50% Off ADVANCE COURSES

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5500~~ | 2750 |
| Diploma in Video Editing | ~~6500~~ | 3250 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும் சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :

Batch I : 08.02.2008 10.00-11.00AM
Batch II : 09.02.2008 01.00-02.00PM
Batch III : 10.02.2008 01.00-02.00PM
Batch IV: 13.02.2008 10.00-11.00AM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தெற்குப் போடும் பிச்சைதான் நடைமுறைச் சாத்தியமான தீர்வா?

பெரும்பான்மை இனத்தவரான பௌத்த, சிங்கள வரின் விருப்பமும், முடிவும், தீர்மானமும் ஒருதலைப்பட் சமாக சிறுபான்மையினரான தமிழர்கள் மீது திணிக்கப் பட்டமையே இலங்கை இனப்பிரச்சினை இவ்வளவு தூரம் விஸ்வரூபம் எடுத்து, மோசமான உள்நாட்டுப் போராக உருக்கொண்டு, பேரழிவுகளை ஏற்படுத்தி வருவதற்குக் காரணம் என்பது வெளிப்படையாகத் தெரியும் அம்சம்.

அமைதி வழியிலோ, இராணுவப் பலாத்காரம் மூலமோ இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயல்பவர்கள் இந்த யதார்த் தத்தைப் புரிந்து கொள்பவர்களாக இல்லை. மீண்டும் ஒரு திணிப்பு மூலம், நிரந்தர - நீடித்து நிற்கின்ற - அமைதி நிலையை அல்லது சமாதானச் சூழலை ஏற்படுத்தி விடலாம் என அவர்கள் கனவு காண்கின்றார்கள். அத்தகைய எத்தனம் அசாத்தியமானது என்பதுதான் நிஜம்; மெய்மை நிலைமை.

இலங்கைத்தீவின் நாடாளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட பெரும்பாலான சட்டங்கள் யாவும் சிறுபான்மையினரைப் புறமொதுக்கி அவர்கள் மீதான அடக்குமுறை விதிக ளாகவே திணிக்கப்பட்டன.

சுதந்திர இலங்கையில் 1972 இலும், பின்னர் 1978 இலும் அடுத்தடுத்து வரிசையாகக் கொண்டுவரப்பட்ட அரசமைப்புகள் கூடத் தமிழரின் பங்குபற்றுதலின்றி - அவர்களின் சம்மதமின்றி - நாடாளுமன்றில் நிறைவேற்றப் பட்டு, பெரும்பான்மை பௌத்த, சிங்களவர்களினால் சிறுபான்மை மக்கள் மீது வல்வந்தமாகத் திணிக்கப்பட்ட வையே. அந்த அடிப்படைச் சட்டங்களின் கீழ்தான் தமிழர் கள், நிரந்தர அடிமைகளாக்கப்பட்டிருக்கின்றனர் என்ற எண்ணம் தமிழர்கள் மனதில் உறுதியாகப் பதிந்துள்ளது.

பௌத்தத்தையும், சிங்களத்தையும் போற்றிப் பேணிப் பாதுகாப்பதையே தனது பிரதான நோக்காகக் கொண்ட இந்த அரசமைப்புகள் இறுக்கமானவை, நெகிழ்வற்றவை. இரும்புச்சட்டச் சுவர் போல தமக்குத் தாமே இறுக்கமான சிறையைக் கட்டியுள்ள இந்த அரசமைப்புகள் ஊடாக ஈழத் தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்வதற்கான தீர்வு ஒன்றை எட்டுவது என்பது சாத்தியப்படப் போவதேயில்லை.

ஆனால், இலங்கை இனப்பிரச்சினைக்கான தமது தீர்வுத்திட்டம் குறித்து நேற்று முன்தினம் தமது நாட்டின் சுதந்திர தின உரையில் பிரஸ்தாபித்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தற்போதைய அரசமைப் புக்குள்ளேயே தாம் தீர்வு ஒன்றைக் காண விழைகின்றார் என்பதைத் தெளிவாகக் கோடிகாட்டி விட்டார்.

அதுவும், தமிழர் தரப்புடன் பேசாமலேயே தீர்வுக்கான அடிப்படை இன்னதுதான் - மாகாண நிர்வாக முறைமை என்பதுதான் - என்றும் அவர் முடிவெடுத்துத் தெளிவு படுத்தி, அறிவித்தும் விட்டார்.

ஆக -

சிறுபான்மையினரான தமிழர்கள் மீது, அவர்களின் விருப் பின்றியே பெரும்பான்மையினரால் திணிக்கப்பட்ட தற்போதைய அரசமைப்பின் கீழ் -

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற பெயரில் மற்றொரு திட்டமும் அவர்களது சம்மதமின்றியே பேரினவாத ஆட்சி யாளர்களால் திணிக்கப்படப் போகின்றது என்பதையே ஜனாதிபதியின் உரை தெளிவுபடுத்தியிருக்கின்றது.

சிங்கள ஆட்சியாளர்கள் எதைச் செய்தாலும், அதற்கு நன்றியுடன் வாலாட்டி, சம்மதம் தெரிவித்து, எலும்புத் துண்டு போன்ற சில சலுகைகளையும் பதவிகளையும் எதிர்பார்த்து விசுவாசம் காட்டும் சில தமிழ்த் தலைமைகள் வேண்டுமானால், திணிக்கப்படும் இத்தகைய திட்டங்களைத் தீர்வாக ஏற்றுக்கொள்ளக்கூடும். ஆனால் தமிழர் சமூகம் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டாது.

வல்வந்தமாகத் திணிக்கப்படும் திட்டத்தை 'நடைமுறைச் சாத்தியமான தீர்வு' என்று இலங்கையின் அரசுத் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிடு வதில்தான் - அந்த அர்த்தத்தில்தான் - குழப்பம் எல் லாம் பொதிந்து கிடக்கின்றது.

'நடைமுறைச் சாத்தியமான தீர்வு' என்று கருதப்படுவது பெரும்பான்மைச் சிங்களவர்களால் அதிகபட்ச விட்டுக் கொடுப்பாக வழங்கப்படக்கூடிய - அவர்கள் தமிழர்க ளுக்கு பிச்சையாக இரப்பதற்கு இணங்கும் - ஒரு திட்டம் என்று கருதி விடக்கூடாது.

அதேபோல பெரும்பான்மைச் சிங்களவர்களிடமிருந்து சிறுபான்மைத் தமிழர்கள் 'பிடுங்கி' எடுக்கக்கூடிய அதிக உச்ச அதிகாரப் பகிர்வும் அல்ல அது.

இலங்கையில் தனித்துவமான வரலாற்று இனமாகத் திகழும் தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில், சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த தமது பாரம்பரிய மண்ணில், அந்நிய சக்திகளின் ஆதிக்கம், தலையீடு, அடக்குமுறை இன்றி, சுதந்திரமாக, கௌரவமாக வாழவும், தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டைப் பேணி, தமது பொருளா தாரத்தை மேம்படுத்தி, தமது இன அடையாளத்தைப் பாதுகாத்துச் சிறப்பெய்துதற்கும் வழி செய்யும் நியாய மான தீர்வுத் திட்டமே நீதியான ஒன்று.

அத்தகைய நீதியான தீர்வுத் திட்டமே நடைமுறைச் சாத்தியமான தீர்வுத்திட்டமாகவும் கருதப்பட வேண்டும்.

அதைவிடுத்து, பெரும்பான்மைச் சிங்களவர் பிச்சை யாகத் தூக்கிப் போடுவதைப் பற்றிப் பிடித்துக் கொள்வது தான் 'நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டம்' என்று யாரும் கருதுவார்களேயானால் அது அநியாயமான தீர்வுத்திட்டம் என்றுதான் அர்த்தப்படுத்தப்பட வேண்டி யதாக இருக்கும்.

'நடைமுறைச் சாத்தியமான தீர்வு' குறித்து அதிகம் பேசும் இலங்கை ஜனாதிபதி கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய அம்சம் இது.

# இந்நாட்டு மக்கள் பயத்தில் உறைந்திருக்கிறார்கள்; அவ்வாறு இருக்கையில் சுதந்திரத்தில் அர்த்தமுண்டா?

## வவுனியா அரச அதிபர் கேட்கிறார் இப்படி

வவுனியா,பெப்.6

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத் தது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு விட யம்தான். ஆயினும் இந்த நாட்டில் மக்களுக்குச் சுதந்திரம் உள்ளதா என் பது கேள்விக்குரியதாகவே இருக் கிறது. மக்கள் சுதந்திரமாக நடமாட முடியவில்லை. சகல இடங்களிலும் உள்ள மக்கள் பயத்தால் உறைந்து போயிருக்கிறார்கள். இவைதான் சுதந் திரத்தின் வெளிப்பாடுகளா? இப்படிக் கருத்துத் தெரிவித்திருக்கிறார் வவுனியா மாவட்ட அரச அதிபர் எஸ்.சண்முகம்.

இலங்கையின் 60 ஆவது சுதந் தினம் தொடர்பில் அன்றைய தினம் பி.பி.ஸி.தமிழோசைக்கு அளித்த செவ்வி ஒன்றிலேயே அவர் மேற் கண்டவாறு கூறியிருந்தார்.

அரச அதிபர் அந்தச் செவ்வியில் மேலும் கூறியதாவது:

உண்மையான சுதந்திரத்தை அடை வதற்கு மக்கள் இன்னும் பல விட யங்களை - பணிகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அவற்றையெல் லாம் நிறைவேற்றிய பின் நாங்கள் அனைவரும் சம உரிமையுடனும், அமைதியுடனும் வாழுகின்ற காலம் வரும்போதுதான் சுதந்திரதினத்தைச் சந்தோஷமாகக் கொண்டாட முடியும். அதுவரையில் இந்தச் சுதந்திரதின விழா வெறும் சம்பிரதாய நடவடிக் கையாகவே அமையும் - இப்படி வவு னியா அரச அதிபர் கூறினார். (அ-2)

# ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து தென்னாபிரிக்காவில் வாழும் தமிழர்கள் போராட்டம்

கொழும்பு,பெப்.6

சிறிலங்கா அரசாங்கத்தின் தமிழ மக்கள் மீதான மனித உரிமை மீறல் களைக் கண்டித்து தென்னாபிரிக்கா வில் வாழும் தமிழர்களால் நேற்று முன்தினம்கவனயீர்ப்புப் போராட் டம் நடத்தப்பட்டது. தென்னாபிரிக்க தமி ழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இக்கவனயீர்ப்புப் போராட் டம் தென்னாபிரிக்காவின் பிரிட்டோ ரியாவில் உள்ள சிறிலங்கா தூதரகத் திற்கு முன்பாக நடத்தப்பட்டது.

சிறிலங்காவின் 60 ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படும் வேளை யில், சுதந்திரம் பெற்றதாகச் சொல்லப் படும் காலத்திலிருந்து தமிழ் மக்க ளுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப் பட்ட அழிப்பு முறைகளைக் கண்டித் தும் அனைத்துலக சமூகத்தை ஏமாற றிப் போர் ஓய்வு காலத்தில் தமிழ நிலத்தை ஆக்கிரமித்தது, போர் வெறி கொண்டு ஒரு தலைப்பட்சமாக போர் ஓய்வு ஒப்பந்தத்தை முறித்துக் கொண் டது மற்றும் தமிழ் மாணவர்கள், சிறு வர்கள், பொதுமக்கள் மீது தொடர்ச் சியாக நிகழ்த்தப்படும் கொலை வெறித் தாக்குதல்களைக் கண்டித் தும் சிறிலங்கா தூதரகத்தை மூடக் கோரியும் இந்தக் கவனயீர்ப்புப் போராட் டம் நடத்தப்பட்டது.




இப் போரட்டத்தில் தென்னாபி ரிக்கத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, தென்னாபிரிக்கத் தமிழர் கூட்டிணைப் புக் கழகம், கௌரெங் தமிழர் கூட்டி ணைப்புக் கழகம், பெனோனி தமிழர் கூட்டமைப்பு தெ.ஆ.கிளை, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், சிவஞான சபை, சைவசித்தாந்த சங்கம், பிரிட் டோரியா தமிழ் லீக் ஆகிய தமிழ் அமைப்புக்களின் முக்கிய பொறுப் பாளர்களும், உறுப்பினர்களும் பங் கேற்றனர். (203)

# தமிழ் இனம் மீதான ஒடுக்குமுறைகளை சித்திரிக்கும் ஒருவார காலக் கண்காட்சி நோர்வேயில் இப்போது

கொழும்பு,பெப்.6

தமிழினத்தின் மீதான பௌத்த - சிங்கள பேரினவாதத்தின் 60 ஆண்டு கால இன ஒடுக்குமுறைக் கொடு மைகளையும், தாயக மக்களின் இன் றைய நிலைமைகளையும் வெளிப்ப டுத்தும் வகையிலான கண்காட்சி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடத்தப்பட்டு வருகிறது. தமிழர்வள ஆலோசனை மையத்தில் சனிக்கிழமை ஆரம்பமாகிய இக் கண்காட்சி எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இதில் முப்பரிமாண மாதிரி அமைப்பு கள், ஒளிப்படங்கள் மற்றும் காட்சிப் பொருள்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் இருந்து பிரித்தா னியர்கள் வெளியேறிய காலத்திலி ருந்து இற்றைவரையான 60 ஆண்டு களாகத் தமிழர்கள் மீது கொடிய இன ஒடுக்குமுறை கட்டவிழ்த்து விடப் பட்டு வருகின்றது.

இன்றைய நிலையில் தமிழர்கள் மீதான பாரிய இன அழிப்பினை இலங்கை அரசு மேற்கொண்டுள்ளது என்பதனை வெளிப்படுத்தும் வகை யில் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலைமைகளை நோர்வேஜிய மக்களுக்கும் நோர்வேயிலுள்ள தமிழ் இளைஞர்களுக்கும் எடுத்துரைப்பதே கண்காட்சியின் முதன்மை நோக்கம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ள னர்.

மக்களின் வாழ்விடங்கள், பாட சாலைகள், பொதுக்கட்டடங்கள், வணக் கத் தலங்கள், இராணுவ உயர் பாது காப்பு வலயங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளமை, மீன்பிடித் தடை யால் தமிழ் மீனவர்கள் எதிர்நோக்கும் இன்னல்கள், ஏ-9 பாதை மூடப்பட்ட நிலையில் திறந்த வெளிச்சிறைச்சா லைக்குள் வாழும் யாழ்.குடாநாட்டு மக்களின் அவல வாழ்வு, இராணுவச் சுற்றிவளைப்புகளுக்கு உட்பட்டுள்ள தமிழ்ப் பாடசாலைகள் போன்ற இரா ணுவத்தின் நடவடிக்கைகளை வெளிப் படும் முப்பரிமாண மாதிரிகள் அமைக் கப்பட்டு மக்களின் பார்வைக்கு வைக் கப்பட்டுள்ளன.

அத்தோடு ஒடுக்குமுறைக் கொடு மைகளையும் அவலங்களையும் வெளிப்படுத்தும் ஒளிப்படங்கள் மற்றும் தமிழ் மக்களின் போராட்ட நியா யப் பாட்டினை விலியுறுத்தும் வகை யிலான வரலாற்று ஆவணங்கள் வைக் கப்பட்டுள்ளதோடு, காணொளியிலும் காண்பிக்கப்படுகின்றது. (203)

| நாளை | |
|---|---|
| தை - 24 | வியாழக்கிழமை 07.02.2008 |
| திதி : அமாவாசை முற்பகல் 10.14 | |
| நட்சத்திரம் : | திருகோணம் முற்பகல் 9.24 வரை |
| சுபநேரம் : | 08.05 - 09.05 |
| ராகுகாலம் : | 02.05 - 03.35 |

# தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.6

சமூகசேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சின் கீழ் உளவளத்துணை உதவியாளராகப் பணி புரிவதற்குப் பட் டதாரிகள் ஆள்சேர்ப்புச் செய்யப்பட வுள்ளனர்.

2008.02.29 ஆம் திகதியன்று 18-45 வயதுக்கிடைப்பட்ட இலங்கைப் பிர ஜைகள் இப் பதவிக்கு விண்ணப்பிக் கலாம்.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் உள வளத்துறை சிறப்புப் பட்டம் பெற்றி ருத்தல் வேண்டும். அல்லது பல்கலைக் கழகப் பட்டத்துடன் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனம் ஒன்றில் உளவளத் துணை டிப்ளோமாக் கற்கை நெறியை மேற்கொண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் 'செயலாளர், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு, 5 ஆம் மாடி, ''செத்சிறிபாய'', பத்திரமுல்ல' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கு மாறு கேட்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை 01.02.2008 ஆம் திக திய வர்த்தமானியில் பார்வையிடலாம்.

* * *

யாழ்ப்பாணம்,பெப்.6

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையின் வகுப்பு II தரம் II இன்மிருக ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், மிருக வைத்தியர்கள் பதவி வெற்றி டங்களுக்கு திறந்த/ மட்டுப்படுத் தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் ஆள்சேர்ப்பு செய்யப்படவுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் 'செயலா ளர், கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு, த.பெ.இல: 45, சாந்த மைக்கல் வீதி, கொழும்பு' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 01.02.2008 ஆம் திகதிய அரச வர்த்த மானியில் பார்வையிடலாம்.

* * *

யாழ்ப்பாணம்,பெப்.6

மோட்டார் போக்குவரத்துத் திணைக் களத்தின் வாகன ஓட்டுநர் பயிற்சியாளர் களாகப் பதிவு செய்வதற்கென எழுத்து மூலப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

25 வயதிற்கு மேற்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், மொழி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் இப் பரீட்சைக்கு விண் ணப்பிக்கலாம். அத்துடன் விண்ணப் பதாரி குறிப்பிட்ட வாகனத்தை ஓட்டு வதற்கான அனுமதிப் பத்திரத்தை விண்ணப்பம் முடிவடையும் திகதி யிலிருந்து 5 ஆண்டுகளுக்கு முன்னர் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் 'பரீட்சை ஆணையாளர், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 01.02. 2008 ஆம் திகதிய அரச வர்த்த மானி யில் பார்வையிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வலய பூப்பந்தாட்டப் போட்டி உடுவில் மான்ஸ் வித்தி. சம்பியனாகத் தெரிவு

வலி.வடக்கு,பெப்.6

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மான்ஸ் வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் உடுவில் மான்ஸ் வித்தியாலயமும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

மூன்று நேர் செற்கள் கொண்ட இப் போட்டியில் முதல் இரண்டு நேர் செற்களில் வெற்றிகொண்டு உடுவில் மான்ஸ் வித்தியாலயம் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

முதல் இரண்டு செற்களையும் முறையே உடுவில் மான்ஸ் வித்தியாலயம் 21:19, 21:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் மான்ஸ் வித்தியாலயம் கடந்த பல வருடங்களாக சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

3ஆம் இடத்திற்கான போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

தெல்லிப்பழை யூனியன் கல் லூரி முதல் இரண்டு நேர்செற்களில் வெற்றி பெற்று 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

(203-86)

## மெய்வன்மைப் போட்டிகள்

சுழிபுரம்,பெப்.6

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியால இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.சந்திரசேகரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபுவும் சிறப்பு விருந்தினர்களாக மாதகல் சென்.ஜோசப் ம.வி. அதிபர் வி.நடராசா, பண்ணாகம் அண்ணாகலை மன்றத் தலைவர் வே.குமரகுரு, பண்ணாகம் அம்பாள் கலைமன்றத் தலைவர் சீ.ஜெயகாந்தன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(203)

* * *

காங்கேசன்துறை நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலயம், நடேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் பொ.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. வடக்கு பிரதேச செயலர் சு.முரளிதரனும் சிறப்பு விருந்தினராக உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.நடராசாவும் கலந்து கொள்வர்.

(203)

## விளையாட்டு அரங்குகளில்

### தடகள வீரர்களின் விவரங்களை ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது

வலி.வடக்கு,பெப்.6

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையோன தடகள விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள வீர, வீராங்கனை களின் பெயர்கள் அடங்கிய பட்டியலை எதிர்வரும் 10ஆம் திகதிக்குப் முன்னர் ஒப்படைக்கும்படி சண்டிலிப்பாய் பிரதேச விளையாட்டு அலுவலர் எஸ்.சதீஸ்குமார் கேட் டுள்ளார்.

(203-86)

### சிம்பொன்சி வி.க. சம்பியனாகத் தெரிவு

வலி.வடக்கு,பெப்.6

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மாதகல் சிம்பொன்சி விளையாட்டு கழகம் சண்டிலிப்பாய் பிரதேச செயலக சம்பியனாகத் தெரிவு செ ய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி கரப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை கலையொளி விளையாட்டுக் கழகமும் மாதகல் சிம்பொன்சி விளையாட்டு கழகமும் மோதிக் கொண்டன.

ஐந்து நேர் செற்கள் கொண்ட இறுப் போட்டியில் முதல் மூன்று நேர் செற்களை தொடர்ந்து சிம்பொன்சி விளையாட்டு கழகம் வெற்றி பெற்றது.

சிம்பொன்சி விளையாட்டு கழகம் முதல் மூன்று நேர் செற்களையும் முறையே 25:17, 25:18, 25:11 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. 3ஆம் இடத்தைச் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது.

(203-86)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,பெப்.6

அராலி வானவில் விளையாட்டுக் கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி த்துணவி சென்.ஸ்ரார் விளையாட்டு கழக மைதானத்தில் நடத்திவரும் ஏழு பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணி எதிர் சுன்னாகம் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக 'பி' அணி.

* சண்டிலிப்பாய் கல்வயல் விநாயகர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி எதிர் சுதுமலை சாவற்காடு மகாத்மா விளையாட்டுக் கழக 'ஏ' அணி.

(203 -86)

* * *

வலி.வடக்கு, பெப்.6

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட் டுக் கழகங்களுக்கு இடையே நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30மணிக்கு இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள கால் இறுதியாட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* சுதுமலை சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகம் எதிர் காக்கைதீவு ஆதவன் விளையாட்டுக் கழகம்.

* நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் விளான் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம்.

(203-86)

★ ★ ★

வலி.வடக்கு,பெப்.6

யாழ்.கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டங்கள் மற்றும் இறுதிப் ஆட்டங்கள் இன்று காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத் தில் இடம்பெறவுள்ளன.

இன்றையஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலை அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**16 வயதுப்பிரிவு**

* 3ஆம் இடத்திற்கான ஆட்டம் - நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

* இறுதிப் ஆட்டம் - யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் ஜேசன்.சாள்ஸ் மகா வித்தியாலம்.

**18 வயதுப்பிரிவு**

* 3ஆம் இடத்திற்கான ஆட்டம்- யாழ்ப்பாணம் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம் எதிர் உரும்பிராய் இந்துக் கல்லூரி.

* இறுதி ஆட்டம் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி .

(203-86)

★ ★ ★

வலி.வடக்கு,பெப்.6

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான பெண்களுக்கான கபடிப் போட்டிகள் இன்று பிற்பகல் 3.15 மணிக்கு குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

(203-86)

## தாச்சிச் சங்கத்திற்கு புதிய நிர்வாகிகள்

வலி.வடக்கு,பெப்.6

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் புதிய நடப்பாண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவராக செ.சண்முகலிங்கமும் உப தலைவராக க.சற்குணலிங்கமும் செயலாளராக நவரத்தினராசாவும் பொருளாளராக வை.ஆனந்த ஜெயஸ்கரனும் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக பத்துப் பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(203-86)


## கறையான் தொல்லையா?

உங்கள் கட்டடம் கறையான் தாக்கத்தால் பாதிக்கப்பட்டிருப்பின் அதற்கான ஆலோசனைகளும் தடுப்பு நடவடிக்கைகளும் எம்மால் வழங்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளுங்கள்

கிறீன் வெல் (தனு) வைத்,

866, பருத்தித்துறை வீதி,

நல்லூர், யாழ்ப்பாணம்.

(70832)


# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் செல்வரத்தினம்

[ஓய்வுபெற்ற ஆராய்ச்சி உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், கொழும்பு]

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் 3ஆம் கட்டை, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்வரத்தினம் அவர்கள் நேற்று (05.02.2008) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வ்ல்லிபுரம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - அன்னம்மா (வேலணை) தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், தேசிய வீடமைப்புத் திணைக்களம்) அன்புக் கணவரும் சுகந்தினியின் அன்புத் தந்தையும் அழகராசா ஜெகனின் அன்பு மாமனும் ஹரிசனின் அன்புப் பேரனும் மயில்வாகனம் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய உத்தியோகத்தர்), செல்லத்துரை (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்), சிவகாமிப்பிள்ளை (வவுனியா), காலஞ்சென்ற செல்வநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் முத்தம்மா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகச் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் கட்டை,
கல்வியங்காடு. (70840)

தகவல்:
செ.மகேஸ்வரி (மனைவி).

## அகஸ்தீன் அந்தோனி



திருநகரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அகஸ்தீன் அந்தோனி 04.02.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அந்தோனிப்பிள்ளை (பவுண்) இன் அன்புக் கணவரும் அரியதாஸ், அஞ்சலஸ், அரியமலர் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதியாராதனைகள் இன்று (06.02.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சிமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜசிங்கம் வீதி,
திருநகர், யாழ்ப்பாணம். (70845)

தகவல்:
பரமநாதன் (ரஞ்சன்).


## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறோயிலர், கல்பேட் இறைச்சிக்கோழி தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம்

19, முருகேசர் லேன், நல்லூர். [70688]


## தவறிவிட்டது

இல.28 நாயன்மார் வீதி, நல்லூர் என்னும் முகவரியைச் சேர்ந்த கனகராஜா ரூபஜானகி என்பவரது தே.அ.அட்டை (இல. 716203654V) யாழ்.போதனா வைத்தியசாலை அருகில் 24.01.2008 அன்று காலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். (70841)

## தவறிவிட்டது

லிநோலியார் வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த அஞ்சலியோ யோண் சாந்தகுமார் மேரிஸ்ரெலா என்பவரது தேசிய அ.அட்டை (645460260V) 31.01.2008 அன்று யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் S.T.P, 149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். T.P.: 021 222 2177


## House for Rent

Kokuvil Hindu College proximity, 25yds from K.K.S. Road, 5 Rooms, 2 attached toilets, one outside, two kitchens, 3 halls, Entry, Exit gates, large garden with full produce. Ideal for NGOs, Medical Centre, Office, Storehouse, Professionals of respected family.

Tel.: 011-2715028/0776326345

## பேப்பர் பதிப்பகம்

தமிழ், ஆங்கில ரைப்செற்றிங், லேசர் கலர், கறுப்பு பிறிண்டிங், லேமினேற்றிங், போட்டோக்கொப்பி, இஸ்கானிங், ரென்சில் கட்டிங், A3 பிறிண் றோணியோ மற்றும் புத்தகம் கட்டும் வேலைகள் என்பன சிறந்த முறையில் செய்துகொள்ளலாம்.

* பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரைகள் புத்தக வடிவாகப் பெற்றுக்கொள்ள முற்பதிவு செய்து மிக விரைவாகப் பெற்றுக்கொள்ளுங்கள். (பிறிண் 7/=)

இராமநாதன் வீதி
(யாழ்.பல்கலைக்கழக முன் வீதி),
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 4590015, 021 2226566

(70839)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. பாதுகாப்புப் படைகளுக்குப் பதிலாக கொஸோவோவில் ஐரோப்பிய ஒன்றியப் படை

## தனிநாட்டுப் பிரகடனத்துக்கு முன்னேற்பாடு?

நியூயோர்க், பெப்.06

கொஸோவோவில் அமைதிப் பணியில் ஈடுபட்டுள்ள ஐ.நா.படைகளுக்குப் பதிலாக ஐரோப்பிய ஒன்றியத்தின் பொலிஸாரும், நீதித்துறை சம்பந்தப்பட்டவர்களும் நியமிக்கப்படவிருக்கிறார்கள். ஒன்றியத்தின் 27 உறுப்பு நாடுகளும் இதற்கான ஒப்புதலை அளித்துள் ளன.

சேர்பியா ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் இந்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனினும், பொலிஸாரையும் ஏனையோரையும் அனுப்பி வைப்பதற்கென திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்கள் எதிர்வரும் 18ஆம் திகதி கூடி அதனை நிர்ணயிப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியப் படைகள் பணியில் ஈடுபடவுள்ள நிலையில், இன்னும் சில வாரங்களுக்குள் கொஸோவோ சுதந்திரப் பிரகடனம் செய்துவிடலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

சேர்பியாவிலிருந்து பிரிந்த மாகாணமான கொஸோவோவின் பிரதமர் ஹசிம் தச்சி இது குறித்துக் குறிப்பிடுகையில், ''சுதந்திர பிரகடனத்துக்கான திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்னர் கொஸோவோவின் சர்வதேச பங்காளர் அமைப்பான ஐரோப்பிய ஒன்றியத்துடனும் அமெரிக்காவுடனும் கலந்தாலோசனை நடத்தப்படும்'' எனத் தெரிவித்துள்ளார்.

''கொஸோவோ தயாராகவுள்ளது. இன்று அது ஒருங்கிணைந்துவிட்டது. சுதந்திரப் பிரகடனத்துக்கும் ஆயத்தமாகிவிட்டது. வெகு விரைவில் இதற்கான திகதியை நிர்ணயித்துவிடுவோம்'' என பிரதமர் ஹசிம் தச்சி பி.பி.ஸி உள்ளூர் நிருபரான ஒனா லங்கிஸ்குவுக்குத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச பாதுகாப்பு பிரசன்னத்துக்கு வழிவிடும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 1244 ஆம் இலக்க விதிக்கிணங்க கொஸோவோவிலுள்ள ஐ.நா.அமைதிப் படைகளி டமிருந்து பாதுகாப்புக்கான பொறுப்பை ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 1,800 பொலிஸாரும் சட்டத்துறை அதிகாரிகளும் கையேற்கவிருக்கிறார்கள். அதேவேளை பலம் பொருந்திய 16,000 நேட்டோ படைகளும் கொஸோவோவில் தொடர்ந்தும் நிலை கொண்டிருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரப் பிரகடனத்தை கொஸோவோ தலைமைத்துவம் சேர்பியாவின் இரண்டாம் கட்ட ஜனாதிபதித் தேர்தல்கள் நிகழ்ந்து முடிவடையும் வரை ஒத்திவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஞாயிற்றுக்கிழமை முடிவடைந்த இத்தேர்தல்களில் மேற்கத்தேய உலகுக்கு ஆதரவான சேர்பிய ஜனாதிபதி போரிஸ் டொடிக் மீண்டும் பெற்றுவுள்ளார்.

இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டியுள்ள ஜனாதிபதி போரிஸ் டொடிக் நேற்று முன்தினம் சேர்பியத் தலைநகரான பெல்கிரேட்டில் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் பேசுகையில், '' சேர்பியா அதன் ஜனநாயக விழுமியங்களை பெரியளவில் வெளிப்படுத்தியுள்ளது.'' - என பெருமிதம் தெரிவித்துள்ளார்.

# சாட்டில் தொடர்கிறது மோதல்

## அரசுக்கு ஆதரவளிக்குமாறு ஐ.நா. வேண்டுகோள்

நைரோபி, பெப்.06

சாட் அரசிற்கு ஆதரவளிக்குமாறு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தனது உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ள அதே வேளை, அந்த நாட்டின் தலைநகரில் கடும் மோதல் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.

ஜனாதிபதி இட்ரிஸ் டெபியின் அரசைக் கவிழ்ப்பதற்காக கிளர்ச்சிக்குழுக்கள் மேற்கொண்டுள்ள தாக்குதலை ஐக்கிய நாடுகள் கண்டித்துள்ளதுடன் வன்முறைகளை நிறுத்துமாறு கோரியுள்ளது. சாட் அரசு விடுத்த வேண்டுகோளையேற்று அந்த அரசிற்கு ஆதரவளிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் இதனை தான் சாட் அரசிற்கு வழங்கிவரும் ஆதரவாகக் கிடைத்துள்ள அங்கீகாரமாகக் கருதும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனினும், பிரான்ஸ் இராணுவ நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளப் போவதில்லை என அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் கௌச்னர் தெரிவித்துள்ளார். பிரான்ஸ் ஏதாவது நடவடிக்கையை மேற்கொள்ள விரும்பினால் பாதுகாப்புச் சபை அதற்கு ஆதரவளிக்கும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை,சாட் கிளர்ச்சியாளர்கள் தலைநகர் மீதான தமது தாக்குதலை மீண்டும் ஆரம்பித்துள்ளனர். தலைநகரிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை பின்வாங்கியிருந்த கிளர்ச்சிக்காரர்கள் பின்னர் மீண்டும் நேற்று தமது தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். மோதலும் ஷெல் தாக்குதலும் மீண்டும் ஆரம்பித்துள் ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்புகள் தெரிவித்துள்ளன. நவீன ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## உலக அரங்கில்

# சேர்பிய ஜனாதிபதித் தேர்தலில் போரிஸ் டெடிக் பெரு வெற்றி

கனான், பெப்.06

மேற்கத்தேய உலகுக்கு ஆதரவான சேர்பிய ஜனாதிபதி போரிஸ் டெடிக், இரண்டாவது முறையாகவும் தேர்தலில் வெற்றிபெற்றுள்ளார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட தேசியக் கட்சியைச் சேர்ந்த டொமிஸ்லேவ் நிக்கொலிக் தோல்வியை அடைந்துள்ளார்.

தேர்தலில் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளால் போரிஸ் டெடிக் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த எண்ணிக்கை பெருந்தொகையானோர் வாக்களிப்பில் கலந்துகொண்டமையையே எடுத்துக் காட்டுகின்றது. ஐரோப்பியாவுடனான சேர்பியாவின் உறவுகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ள ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகவே இத்தேர்தல் அமைந்துள்ளது என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத் தேர்தலில் போரிஸ் டெடிக் 51 சதவீத வாக்குகளையும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட டொமிஸ்லேவ் நிக்கொலிக் 47 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளார்கள். ஒரு சிறு தொகை வித்தியாசத்தில் டெடிக் வெற்றி பெற்றுள்ளார் என சேர்பியா தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


VACANCY

sky

Lecturer

Ms-Office, Desk Top Publishing

SKY COMPUTER(PVT)LTD

(நேரில் வரவும்)

No, 89, Kandy Road, Chundikuli, Jaffna

(கச்சேரிக்கு அருகாமையில்)


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 08 ★ 04 ★ 1983



ஆண்டவன் மடியில் 24 ★ 12 ★ 2007

### குமாரசாமி ஸ்ரீகுமார் (சசி)

*கடந்த 24.12.2007 அன்று இந்தோனேசியாவில் சிவபதமடைந்த எமது குலக்கொழுந்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர்அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நேரிலும், தொலைபேசியிலும் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் இந்தோனேசியாவிலிருந்து அன்னாரின் பூதவுடலை வீட்டுக்கு எடுத்துவர உதவிய நண்பர்கள், ஐ.ஒ.எம். நிறுவனத்தினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

*இன்று (06.02.2008) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

கரம்பைக்குறிஞ்சி மேற்கு,
வரணி. (70858) - குடும்பத்தினர்

## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத
நிலையை நான் அடைய வழிகாட்டும்
பரிசுத்த ஆவியே உமது நாமம்
அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருள்
கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப்
பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு
செய்தோரை நான் மன்னிக்க அருள்
புரிபவரே, என் வாழ்வில் எச்
சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற
துணையான உமக்கு இச்சிறிய செபத்தின்
மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி
கூறுகின்றேன். என் தேவைகள்
எவ்வளவு முக்கியமாக இருப்பினும்
எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து
விலகாமல் என்றும் உம்மில்
நிலைத்திருப்பேனென உறுதி
கூறுகின்றேன். நானும் என்னால்
நேசிக்கப்படும் அனைவரும்
என்றென்றும் உமது முடிவில்லா
மகிமையில் பங்கு பெற
வேண்டுகின்றேன்.

[illegible] அடியாள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ப.ஞானபண்டிதன், முகாமைத்துவ உதவியாளர் ப.அம்பிகை பாகன் ஆகியோரின் அன்புத் தாயார்

### திருமதி வாலாம்பிகை பஞ்சாட்சரம்

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், வேலணை. பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகஸ்தர்களும்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை அசுந்தாராணி (அனி)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை அசுந்தாராணி 04.02.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை (சீமான்பிள்ளை) - திவ்வியம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம்-பாக்கியம் தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் (சின்னமணி) அன்பு மனைவியும் பொன்கிளி, லீலா, சிசிலியா (பிள்ளை), இராஜேஸ்வரன், காலஞ் சென்றவர்களான சின்னக்கிளி, டொன் பொஸ்கோ ஆகியோரின் பாசமிகு சகோதரியும், யூலியற்மாலினி (மாலா), மரினோ (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குலம், நித்தியா ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை (ஐயாண்ணா), சுப்பிரமணியம், யேசுரட்ணம், பூமணி மற்றும் பற்றிக், ஜீவமலர், ஜெகதாம்பாள் ஆகியோரின் அன்பு மைத்துனியும் மிதுஷனின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.02.2008) புதன்கிழமை பி.ப.3 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்கு புனித கொஞ்செஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*41, புதுவீதி,*
*கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.* (70857) தகவல்: குடும்பத்தினர்.

### மயில்வாகனம் மகாலிங்கம் (கார் மகான்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயிவாகனம் மகாலிங்கம் நேற்று (05.02.2008) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் பவளமணியின் அன்புக் கணவரும் மயில்வாகனம் - திரவியம் தம்பதியரின் அன்பு மகனும் வைரவப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் அன்பரசி, ஜீவரசி, மணிமாறன், எழிலரசி, காண்டீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகநாதன் (மன்னார்), லிங்கேஸ்வரன்(கனடா), தயாபரன்(ஜேர்மனி), தாரணி (இணுவில்), கலையரசி(இணுவில்) ஆகியோரின் மாமனாரும் றஜகுலன், லோசனா, கிரிசனா, விபூசன், அபிலாஸ், பிரவீன், பாமிலன், மதுமிதா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற குமாரலிங்கம், கனகலிங்கம், ராஜேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வரட்ணம், யோகேஸ்வரி, மனோரஞ்சிதம், இராசேந்திரம், விஜயரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*குமாரலிங்கம் வீதி,*
*இணுவில் கிழக்கு.* தகவல்: காண்டீபன் (மகன்)

### தம்பையா துரைராசா (தங்கம்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம், ஆனைக்கோட்டையை வசிப்பிடாமகவும் கொண்ட தம்பையா துரைராசா(தங்கம்) நேற்று (05.02.2008) செவ்வாய்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தம்பையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் செல்வரட்ணம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் சறோஜினி தேவியின் அன்புக் கணவரும் சர்மினி(கொக்குவில் இந்துக் கல்லூரி உயர்தர மாணவி), ஸங்கீர்த்தா(ஆனைக்கோட்டை றோ.க. மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்மலிங்கம்(கொழும்பு), காலஞ்சென்ற ராசேஸ்வரி, காலஞ்சென்ற நவரட்ணம்(நந்தினி பேக்கரி உரிமையாளர்) மற்றும் ராசதுரை (பிரான்ஸ்), சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரனும் பராசக்தி (கனடா), சரஸ்வதி, சிவராசா ஆகியோரின் மைத்துனரும் சண்முகத்தின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.02.2008) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (70860) தகவல்: சண்முகம் (சகோதரன் - இணுவில்)

### திருமதி கந்தையா சோதிப்பிள்ளை



கல்வளை, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சோதிப்பிள்ளை நேற்று(05.02.2008) செவ்வாய்க்கிழமை மதியம் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின்(கந்தர்) அன்பு மனைவியும இராசா, தங்கம்மா, கணபதிப்பிள்ளை, தெய்வானை(பவளம்), இலட்சுமணர் (யோகர்), தெய்வநாயகி ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.02.2008) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணியளவில் சண்டிலிப்பாய் சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்வளை,*
*சண்டிலிப்பாய்.* (70861) தகவல்: நி.கி.நந்தராஜா (பேரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓமந்தையில் கூட்டமைப்பு எம்.பிக்கள் தடுப்பு; மனித உரிமை மீறல் என சம்பந்தன் விசனம்

கொழும்பு,பெப்.6

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவனேசன் மற்றும் கனகரட்ணம் ஆகிய இருவரும் வன்னியிலிருந்து நாடாளுமன்றத்திற்கு வர முடியாதபடி ஓமந்தை நுழைவாயிலில் உள்ள படையினரால் தடுக்கப்பட்டமை தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நேற்றுத் தனது எதிர்ப்பையும் அதிருப்தியையும் நாடாளுமன்றத்தில் வெளியிட்டது.

இச் செயற்பாடு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறுவது மாத்திரமன்றி, பாரிய மனித உரிமை மீறலும் கூட என்று கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் ஆர்.சம்பந்தன் சபையில் கூறினார்.

மேலும், இது தொடர்பாக விசாரணை நடத்தி எதிர்காலத்திலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதவாறு தடுக்க வேண்டும். இத்தகைய செயல்கள் நாடாளுமன்றத்தின் கௌரவத்திற்குப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, இது அரசின் கவனத்திற்கு உடன் எடுத்துச் செல்லப்படவேண்டும் என்று சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளித்துப் பேசிய அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா, இது தொடர்பாக அரசுக்கு எதுவும் தெரியாது என்றும், அரசு இதைத் தேடிப்பார்த்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறினார். (சி)

# மட்டு. கல்வியியல் மாணவருக்கு சனிக்கிழமையன்று கப்பல் வசதி

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ். மாவட்டத்தில் இருந்து மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கப்பல் பிரயாண ஒழுங்குகள் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அங்கு எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்னர் சமுகமளித்திருக்க வேண்டும் என்று கல்லூரியின் பீடாதிபதி அறிவித்திருந்தார்.

இதனையடுத்து மேற்படி கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான துரிதபோக்குவரத்து ஒழுங்குகளை யாழ். அரச அதிபர் மேற்கொண்டுள்ளார். சம்பந்தப்பட்ட மாணவர்களை நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அரச அதிபர் கே.கணேஷ் கேட்டுள்ளார்.

யாழ். செயலகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள மாணவர்களின் பெயர், விவரங்களுக்கு அமைவாக அவர்களின் பயணத்துக்கான பாதுகாப்பு அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-2)

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3.30 மணிக்கும் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

முற்பகலில் நடத்தப்பட்ட தாக்குதலில் சயோட் (வயது - 09), சிஸ்ரன் (வயது - 09) ஆகிய சிறுவர்கள் காயமடைந்தனர். பிற்பகலில் நடத்தப்பட்ட தாக்குதலில் முள்ளியவளையைச் சேர்ந்த் மனோகரலிங்கம் நிமலகீதன் (வயது - 26) என்பவர் படுகாயமடைந்தார்.

இதேவேளை - கிளிநொச்சி நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள கணேசபுரம் பகுதியில், நேற்று செவ்வாய்க்கிழமை பிறபகல் 3.35 மணியளவில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இரண்டு பேர் காயமடைந்தனர். 2 வீடுகள் முற்றாக அழிந்து போயின; 5 வீடுகள் பகுதியாகச் சேதமடைந்துள்ளன என்றும் வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலில் ஐயன் குளத்தைச் சேர்ந்த சின்னராசா (வயது - 42), கணேசபுரத்தைச் சேர்ந்த சுவாமிநாதன் கோகிலநாதன் (வயது -48) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். கணேசபுரத்தைச் சேர்ந்த சண்முகராஜ் குணராஜ (வயது -33), பசுபதி உமாராஜ் ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (அ-2)

## கிரனேட் பொருத்தப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் சத்தம் மிகப் பெரியதாக இருந்ததால் அதை கிரனேட் பொருத்தப்பட்ட றொக்கெற் லோஞ்சர் தாக்குதலாக இருக்கும் எனக் கருதினோம். எங்களின் ஒரு படகு சேதமடைந்தது.

### திரும்பித் தாக்கவில்லை

நேரம் இருளடைந்திருந்ததாலும், அப்பகுதியில் சுமார் நானூறு இந்தியப் படகுகள் காணப்பட்டமையாலும் நாங்கள் திரும்பித் தாக்கவுமில்லை. உரிய விசாரணைகளை நடத்தவும் முடியவில்லை.

இச்சம்பவம் இடம்பெற்றதும், எமது பகுதிக்குள் அத்துமீறிய அந்த இந்தியப் படகுகள் பின்வாங்கி இந்திய எல்லைக்குள் மீண்டுவிட்டன'' - என்றார் அவர்.

இந்தச் சம்பவம் குறித்து கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கும் இலங்கைக் கடற்படை அறிவித்திருப்பதாக அறியவந்தது.

இந்திய மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக ஊடுருவுவதால் இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது'' - என்றும் இலங்கைக் கடற்படையின் பேச்சாளர் டி.கே.பி. தஸநாயக்கா குறிப்பிட்டார்.

### தடுப்பதற்கு ஏதாவது செய்தாகவேண்டும்

இந்தச் சம்பவங்களின் விளைவாக, இனிமேல் இந்தியப் படகுகளில் இருந்து உண்மையாகவே அவசர உதவி கோரப்பட்டாலும், அதற்குத் தாம் சாதகமாகச் செயற்படமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில், இத்தகைய படகுகளை நெருங்கினால் எங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படுவதற்கான ஆபத்து உண்டு.

இதுவரை காலமும் இவ்வாறு அத்துமீறும் படகுகளுக்குள் எமது கடற்படையினர் ஏறுவதும், அத்துமீறுவோரைக் கைதுசெய்வதும், பின்னர் அவர்களை விடுவிப்பதும் இடம்பெற்றுவந்துள்ளன. இனிமேல் அப்படிச் செய்யமுடியாது போலும்.

எனவே, இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீன்பிடிப் படகுகள் அத்துமீறுகின்றமையைத் தடுப்பதற்கு ஏதாவது உடனடியாகச் செய்தாகவேண்டும் - என்றார் அவர். (சி)

# ஜனசக்தி அலுவலகத்தில் நாளை இரத்ததான நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.5

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவுடன் இணைந்து ஜனசக்தி காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நடத்தும் இரத்ததான நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 9.15 மணிமுதல் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள ஜனசக்தி காப்புறுதிக் கூட்டுத்தாபன அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இரத்தானம் செய்வதில் ஆர்வமுள்ள சகலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு உயிர்காக்கும் பணிக்கு உதவமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## புதிய எம்.பிக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடிய போது முதலில் பிரியங்கர ஜயரட்ணவும், அடுத்து முஹம்மட் இமாமும் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். (சி)

## நவ்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தோனேஷியாவிலிருந்து படகு மூலம் ஆஸ்திரேலியாவிற்குச் செல்ல முயன்ற 83 இலங்கையர்கள் கடந்த வருடம் மார்ச் மாதம் நடுக்கடலில் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் அநேகமானவர்கள் 18 முதல் 28 வயதிற்குட்பட்ட மாணவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மருத்துவ சிகிச்சைக்காக பேர்த்தில் அனுமதிக்கப்பட்டிருநத - இவர்களில் ஒருவருக்கும் - நிரந்தரப் பாதுகாப்பு விஸா வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (சி)

## குடாநாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹப்பு ஆராய்ச்சி நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கொழும்பு நகரை அண்மித்த பல்வேறு இடங்களில் வைத்து குறிப்பிட்ட சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்றும் -

கைது செய்யப்பட்டவர்களிடம் வன்முறைகள் தொடர்பாக மேலதிக விசாரணைகள் செய்ய வேண்டும் என்றும் நீதிவானிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்தே நீதிவான் தடுத்து வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## 200 அடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தில் காயமுற்றவர்கள் முதலில் லவுகபிடிய வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டனர். ஆனால் அங்கு போதிய மருந்துப் பொருள்களும், ஒட்சிசன் மற்றும் வைத்திய உபகரணங்களும் இல்லாமையால் பெரும்பாலானோர் உடனடியாக கம்பளை போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

காயமுற்றவர்களில் 17 பேர் தற்சமயம் லவுகபிடிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்றுக்காலை கம்பளை வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட 28 பேரில் ஏழுபேர் மேலதிக சிகிச்சைக்காகக் கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர் எனப் புசல்லாவை மாவட்ட வைத்திய அதிகாரி இப்றாலெப்பை தெரிவித்தார். (அ-சி)

PAPER CLASS
தமிழ்
திரு. குழந்தை
ஆரம்பம்
7.2.2008
வியாழன் 3 pm
யுனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)

# இலங்கை இராணுவத்துக்கு உதவி செய்யாதீர்; இந்திய அரசை வலியுறுத்தி இன்று ஆர்ப்பாட்டம்!

சென்னை,பெப். 06

இலங்கை இராணுவத்திற்கு ஆயுத உதவி உட்பட எந்த உதவியும் செய்யக்கூடாது என்று இந்திய மத்திய அரசை வலியுறுத்தி பெரியார் திராவிடர் கழக ஏற்பாட்டில் இன்று புதுடில்லியில் ஆட்சேப ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறவிருக்கிறது.

இதில் கலந்துகொள்வதற்காக பெரியார் திராவிடக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் 450 பேர் நேற்றுமுன்தினம் தமிழகத்திலிருந்து டில்லி புறப்பட்டுச் சென்றனர். (சி)

## தாக்குதல் படகுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலையடுத்து கடற்படையினர் சென்ற அதிவேகப் படகு ஒன்று அதிலிருந்த ஏழு கடற்படையினருடன் காணாமல் போயிருக்கின்றது.

நேற்று அதிகாலை முதல் அப்பகுதியில் தீவிர தேடுதல் நடைபெற்றன.

இந்திய மீனவர்களைப் போன்று கடலில் தரித்து நின்ற கடற்புலிகளே இத் தாக்குதலை நடத்தியுள்ளனர் - என்றார் அவர்.

இவேளை -

படகுடன் நின்ற பகுதியிலிருந்து இலங் கைக் கடற்படையை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட போதிலும் இந்திய மீனவர் படகுகள் இடையில் அகப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக தமது தரப்பு தாக்குதல் எதனையும் நடத்தவில்லை என்று கடற்படை வட்டாரங்கள் கூறியதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

கடற்படையினர் மீது தாக்குதல் நடத் துவதற்காக இந்திய மீனவர் படகுகளுடன் கடற்புலிகளின் படகுகளும் கலந்துநின்றன என்றும் கடற்படைத் தரப்பில் மேலும் கூறப்பட்டது.

கடற்புலிகள் சில வேளைகளில் தமிழக மீனவர்களின் படகுகளைச் கடத்திச் சென்று ஆயுதங்களை எடுத்துவருவதாகவும் கடற்படைத் தரப்பு மேலும் கூறியது.

இதேவேளை இச்சம்பவம் குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்து டன் இலங்கை அரசு தொடர்பு கொண்டு சில விளக்கங்களைக் கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற் பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடித்தது மட்டு மன்றி விடுதலைப் புலிகளுக்கும் அவர் கள் உதவினரா என்பதனை ஆராயுமாறும் காணாமற்போன கடற்படையினர் மற்றும் அதிவேகப் படகு குறித்து இந்திய மீனவர் களுக்கு தகவல் தெரியுமா என்பது குறித் தும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளுடன் சிறிலங்கா அரசாங்கம் பேச்சு நடத்தியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. (அ-சி)

**ஆசிரியர்கள் ஒன்றுகூடல்**

முன்பு அறிவித்ததற்கமைய இன்று மாலை 4 மணிக்கு நிறுவனத்தில் நடைபெறும் ஒன்றுகூடலில் நிறுவன ஆசிரியர்கள் அனைவரும் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

நிர்வாகம் DMI
கிளை நிறுவனம்
154 A, நாவலர் வீதி (நாவலர் வீதி, பிறவுண் வீதிச் சந்தி), யாழ்ப்பாணம்.

**மாணவர் கவனத்திற்கு**

எதிர்வரும் சனிக்கிழமை (09.02.2008) அன்று A/L 2008, 2009, 2010 மாணவர்கள் அனைவருக்கும் கணக்கீட்டுப் பரீட்சை நடைபெறவுள்ளதால் அதற்காக உங்களைத் தயார்ப்படுத்துமாறு கேட்கப்படுகிறீர்கள்.

DMI Jaffna | கணக்கீடு D.Sam | ACA Inuvil

பெப்ரவரி 9 சனி | கிளை நிறுவனம் DMI | காலை 8 மணி

154 A, நாவலர் வீதி (நாவலர் வீதி, பிறவுண் வீதிச் சந்தி) யாழ்ப்பாணம்.

A/L Day, 2008, 2009, 2010 (கலை வர்த்தகப் பிரிவுகள்)

பாடங்களைத் தாங்கிவருவோர்

| | | | |
|---|---|---|---|
| B.S. பசில் | (B.St.) | பத்மன் | (His.) |
| S.S. சிறி | (Eco.) | இளங்கோ | (P/S.) |
| சந்திரசேகர் | (Tam.) | கனகேஸ்வரன் | (Dra.) |
| ஜோதீஸ்வரன் | (H/C.) | தேவராஜா | (Chr.) |
| விஜயகுமார் | (H/C.) | தவசேகர் | (IQ) |
| மோகன் | (Log.) | சுதர்சன் | (Eng.) |
| பாபு | (Geo.) | K.R. சூரி | (Sin.) |

NOW AVAILABLE

Unipro
Intel P4 3.0/2m,
Intel 945 MB
512Mb DDR2
80Gb Sata HDD,
Combo
15" SS/VS Monitor
Keyboard
Mouse
Speaker
UPS

Processors
Mother Boards
Memories

UniCore
Intel C2D 2.2/2m,
Intel 945 MB
1 Gb DDR2
160Gb Sata HDD,
DVD-RW
17" LCD Monitor
Keyboard
Mouse
Speaker
UPS

UniDual
Intel Dual 3.0/4m
Intel 945 MB
1 Gb DDR2
80Gb Sata HDD,
DVD-RW
15" LCD Monitor
Keyboard
Mouse
Speaker
UPS

Printers
Laser
Dot Matrix
InkJet

UNIT
மனோகரா சந்தி
347, K.K.S Road, Jaffna.
4590720, 2228344

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org